வாராந்த சஞ்சிகை

ஒகஸ்ட் 27 – செப்.02/2014

# சுடர் ஒளி

பக்கம் 24

விலை 30/-



## கருவறுக்கும் அபிவிருத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செஃல் பி ராணி

இப்போது தம்மைத் தாமே புகைப்படம் எடுத்துக் கொள்ளும் 'செல்ஃபி' எனப்படும் பழக்கம் பிரபலமடைந்துள்ளது.

உலகிலேயே அதிகம் செல்ஃபி படங்களைக் கொண்ட செஃல்பி ராணி யார் தெரியுமா?

தாய்லாந்தைச் சேர்ந்த மார்டாவோ மோர்டார் (வயது-40) என்பவரே செஃல்பி ராணி என்றழைக்கப்படுகிறார். இவர் 'இன்ஸ்டாகிராம்' என்ற சமூக வலைத்தளத்தில் தன்னைத் தானே எடுத்துக்கொண்ட செல்ஃபி படங்களைப் பதிவேற்றும் வழக்கம் கொண்டவர். இதுவரை இவர் 12,000 செல்ஃபி படங்களை இந்த வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளார்.

தன்னுடைய குளியலறையில் உள்ள கண்ணாடி முன் நின்று படமெடுப்பதுதான் இவருக்கு மிகப் பிடிக்கும் என்றாலும், இவரின் புகைப்படங்கள் எதுவுமே ஆபாசமானதாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!
பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.
அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன!
நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாருங்கள்!

பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539
மின்னஞ்சல்: banksup@cbsl.lk




Chevron

CALTEX

## எங்கள் முன்னணி வரிசையாளர்கள் ஒப்பிட முடியாத நன்மைகளினால் ஊக்குவிக்கப்படுவார்கள்

செவ்ரோனில், சுய உந்துதல் மற்றும் ஆற்றலுடன் நிலையாக செயற்படும் விற்பனை ஊழியர்கள், சந்தை வரம்புகளைக் கடந்த உழைப்பூதிய போதிகள் மற்றும் ஊக்குவிப்புகளை அனுபவிக்க முடியும்.

- கம்பனியினால் பராமரிக்கப்படும் கார்
- கம்பனியினால் வரி செலுத்தலுடன் கூடிய உத்தரவாதப்படுத்தப்பட்ட மூன்று மாத மிகை ஊதியம்
- வருடாந்த செயற்பாடுகளின் அடிப்படையில் வேறுபட்ட மிகை ஊதியம்

### விற்பனை நிறைவேற்றுனர் (வடக்கு பிராந்தியம்) பதவி வெற்றிடம்

ஒரு விற்பனை நிறைவேற்றுனராக, நீங்கள் விநியோகித்தல் விற்பனை பிரதிநிதிகளை மேற்பார்வை செய்தல், விற்பனை விநியோகித்தலை முகாமை செய்தல், எங்கள் ஊடகப் பங்குதாரர்களுடன் பணியாற்றுதல் மற்றும் உடன்பட்ட செயற்பாட்டு இலக்குகளை அடைவதற்கான முழுப் பொறுப்பினையும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

### இதற்குத் தேவையானவை:

www.chevron.lk

செவ்ரோன் லூப்ரிகன்ட்ஸ் லங்கா பிஎல்சி

விண்ணப்பிப்பதற்கு www.chevron.lk எனும் இணைத்தளத்திற்கு செல்லவும்.

BRITISH COUNCIL

## ASSISTANT MANAGER STUDENT AND CANDIDATE SERVICES – JAFFNA BRANCH

The purpose of the British Council is to create international opportunities for the people of the UK and other countries and build trust between them worldwide. We call this cultural relations. At a country level, the British Council Sri Lanka is a vibrant operation delivering a high impact portfolio of projects. We have 25,000 members in our library, the largest membership in the British Council global network and run two of the largest British Council Teaching Centre and Exams operations in the world.

Our new centre in Jaffna provides access to a full range of products and services. The office consists of a 5-classroom Teaching Centre, a Library and an Exams operation. It also delivers a variety of grant and partner-funded projects.

**Purpose of job:**
The post holder is required to ensure the delivery of excellent customer service to all customers interested in all of the British Council's activities. Post holder will also be responsible for the implementation of administrative procedures and frontline reception systems meeting and exceeding customers' expectations enabling the British Council to meet its corporate objectives.
**Starting salary:** Rs. 65,104/-

This full time post based in **Jaffna** is available for Sri Lankan citizens on a **one year fixed term contract** from September/October 2014.

Application form and descriptions of the competencies and the skills needed for the above post can be downloaded from **http://www.britishcouncil.lk/about/jobs** and should be e-mailed to us at **vacancies.lk@britishcouncil.org** no later than **Sunday 31 August 2014**. Please indicate **"Assistant Manager Student and Candidate Services - Jaffna"** in the subject line.

Only the British Council application forms are accepted and CV's won't be considered for shortlisting. Further clarification regarding experience and skills needed for the job can be obtained from our Human Resources Unit on (011)4521521/(011)7521521.

Short-listed candidates will be contacted within 2-3 weeks after the application closing date and we thank all prospective applicants for their interest in this organisation.

The British Council is committed to a policy of equal opportunity and child protection. We welcome applicants from all sections of the community. We work to ensure that people are not unjustifiably discriminated against on the basis of age, disability, ethnicity, gender, religion or belief, sexual orientation or any other irrelevant grounds.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேனாவை அறுக்கும் கத்திகள்

- பி. ஏ. கிருஷ்ணன்



உலகில் எந்தவொரு ஆயுதத்தை விடவும் வலிமையானது பேனா முனை என்று சொல்வார்கள். ஆனால் அந்தப் பேனாவை ஏந்தும் ஊடகவியலாளர்கள் இதற்கு எதிர்மாறானவர்கள். தங்கள் உயிர்களைக் காத்துக் கொள்ள எந்தவொரு ஆயுதத்தையும் கொண்டிருக்காதவர்கள். எனவே தான் ஊடகவியலாளர்களை கொன்று பேனா முனைகளை பேச விடாமல் செய்வதே எல்லா அதிகாரத் தரப்புகளுக்கும் இலகுவான வழிமுறையாக இருக்கிறது. பயங்கரவாதம், அமெரிக்க ஊடுருவல் இவற்றுக்கெல்லாம் நடுவில் மாட்டிக்கொண்டிருக்கிறார்கள் பத்திரிகையாளர்கள்.

போர் நடக்கும் இடத்துக்குச் சென்று அங்கு நடப்பதைப் பற்றி எழுதுவது மிகவும் ஆபத்தான வேலை. ஆனால், இந்த வேலை 19ஆம் நூற்றாண்டின் மைய ஆண்டுகளிலிருந்து தொடர்ந்து நடந்து வந்துகொண்டிருக்கிறது. போர்க்களத்தில் மாண்ட பத்திரிகை யாளர்கள் நூற்றுக்கணக்கில் இருப்பார்கள். ஈராக்கிலும் சிரியாவிலும் நடக்கும் போர்களில் மட்டுமே இறந்த நிருபர் களின் எண்ணிக்கை 61 என்று பிரிட்டன் நாளிதழ் ஒன்று சொல்கிறது.

போரின் வெப்பமான தருணங்களில் பலியாவது வேறு. ஆனால், கடத்தப்பட்டு, சுமார் 2 வருடங்கள் சிறை களில் செலவிட்ட பின், கால்நடைகளைப் போலக் கழுத்தறுபட்டுக் கொல்லப்படுவது வேறு. ஒகஸ்ட் 19ஆம் திகதி நடந்த அமெரிக்க ஊடகவியலாளர் ஜேம்ஸ் ஃபோலியின் கொலை எல்லோரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியிருக்கிறது.

### தலைகளை அறு

போரில் பிடிபட்டவரையோ அல்லது கடத்தப்பட்டவரையோ தலையை அறுத்துக் கொல்வது என்பது ஈராக்-சிரியா பயங்கர வாதத்தின் முத்திரை. ஈராக்கில் நடந்த இத்தகைய கொலைகள் கணக்கில்லாதவை. ஆனால், ஒரு ஊடகவியலாளர் இதுபோன்று கொல்லப்படுவது இரண்டாவது முறையாக நடந்திருக்கிறது. 12 ஆண்டுகளுக்கு முன்னால் டானியல் பெர்ல் என்பவரின் தலை பாகிஸ்தானில் அறுக்கப்பட்டது. இத்தகைய கொலைமுறைகளுக்கு இரண்டு காரணங்கள். முதற்காரணம், இது மேற்கத்திய நாடுகளுக்கு மிகுந்த அருவருப்பையும், போர் நடக்கும் இடத்துக்கு அருகே செல்பவர் களுக்குப் பயத்தையும் ஏற்படுத்துகிறது.

இரண்டாவது காரணம், கலாசாரம் சார்ந்தது. விதவிதமான துப்பாக்கிகள் வந்துவிட்ட போதிலும், வாளும் கத்தியும் மதப் போராளிகளின் பிரிக்க முடியாத அங்கங்களாக இருந்துவந்திருக்கின்றன. அருகில் சென்று ஒருவரின் உயிரை எடுக்கும்போது, அவர்கள் வாளையோ கத்தியையோதான் விரும்புகிறார்கள்.

தலை அறுக்கப்படுவதை இணையவசதியால் நாம் வீட்டிலிருந்தே பார்க்க முடிகிறது. இதனால், பயங்கரவாதத் தின் மீது மிகுந்த வெறுப்பு பொதுமக்களுக்கு ஏற்பட்டாலும், சிலர் அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுக்க வேறு வழி யில்லை என்று நினைக்கிறார்கள். இவர்களில் சிலர் நாமும் சிரியாவுக்கோ ஈராக்குக்கோ சென்று போர் புரியலாம் என்றும் நினைக்கலாம்.

தலை அறுபடப்போகும் ஃபோலி, "என்னுடைய சவப்பெட்டியின் கடைசி ஆணி அமெரிக்க விமானத் தாக்குதல்களால் அடிக்கப்பட்டது" என்று தன்னுடைய இறுதி வார்த்தைகளை உச்சரிக்கிறார். அறுப்பவரோ ஒபாமாவுக்கு எச்சரிக்கை விடுக்கிறார்.

"நீங்கள் கலகத்தை அடக்கு வதாக நினைக்க வேண்டாம். நீங்கள் போர் செய்வது இஸ்லாமிய இராணுவத்துக்கு எதிராக. உலகெங்கிலும் உள்ள முஸ்லிம்களின் ஆதரவைப் பெற்ற காலிஃபத்துக்கு எதிராக" என்கிறார்.

ஆனால், ஒபாமா மனம் மாறமாட்டார். விமானத் தாக்குதல் தீவிரப்படுத்தப்படலாம். பயங்கரவாதிகளின் பிடியில் இருக்கும் இன்னுமொரு பத்திரிகையாளரின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை. இரண்டாவது வீடியோ என்றைக்கு வேண்டுமானாலும் வரலாம்.

### பத்திரிகையாளர்களின் நிலைமை

உயிரைப் பணயம் வைத்துப் போர்களைப் பற்றி எழுதுவதற்காகப் போர்க்களங்களுக்குச் செல்லும் பத்திரிகையாளர்களின் நிலைமை நாம் நினைப்பதைவிட மோசமானது. பெரிய பத்திரிகைகள்கூட இப்போதெல்லாம் போர்க் களத்தில் செய்தி சேகரிக்கவென்று தனி நிருபர்களை வைத்துக் கொள்ள விரும்புவதில்லை. அவ்வாறு வைத்துக்கொண்டால், அவர்களுக்குத் தங்குமிடம், உணவு தவிர சம்பளம் கொடுக்க வேண்டும். அவர்களின் ஓய்வூதியம் போன்றவற்றுக்கு வழிசெய்ய வேண்டும். எனவே, பத்திரிகைகள் சுயாதீன ஊடகவியலாளர்களே விரும்புகின்றன. கதை நன்றாக இருந்தால் காசு. அவ்வளவுதான். எனவே, பல நிருபர்கள் கதை நன்றாக இருப்பதற்காக, போர் மையத்துக்கே சென்று பார்க்கலாம் என்று நினைப்பதில் ஆச்சரியம் இல்லை.

"அபாயங்களுக்குப் பயந்தால் நடுவே போக முடியாது. காயப்படக் கூடாது. அதை விட இறப்பதே மேல். காயப்பட்டால் மருத்துவச் செலவு கட்டுபடியாகாது" என்று ஒரு பத்திரிகையாளர் சொல்கிறார். இவ்வளவு பாடுபட்ட பிறகும், இவர்கள் எழுதுவது நினைவில் நிற்கும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை. போரி என்ற பெண் நிருபர் கூறுகிறார்: "உண்மை என்னவென்றால், நாங்கள் தோல்வியுற்றவர்கள். இரண்டு ஆண்டுகள் கழித்து எங்கள் வாசகர்களுக்கு டமாஸ்கஸ் எங்கிருக்கிறது என்பதுகூடச் சரியாகத் தெரியாது. உலகம் சிரியாவில் நடப்பதை அந்தக் குழப்பம் என்றுதான் கூறும். யாருக்கும் அங்கு என்ன நடக்கிறது என்பதுபற்றி எந்தப் புரிதலும் கிடையாது. அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் ரத்தம், ரத்தம், ரத்தம். அவ்வளவுதான்"

### உலக, இந்திய இஸ்லாமிய மக்களின் நிலை

உலகெங்கிலும் இருக்கும் இஸ்லாமிய மக்களில் பலர், இந்தக் கொலையைக் கடுமையாகக் கண்டனம் செய்திருக் கிறார்கள். உலக மக்கள் அனைவருக்கும் அமெரிக்கத் தலையீடுதான் இன்று நடக்கும் படுகொலைகளுக்கு முக்கிய மான காரணம் என்றும் தெரியும். ஆனால், அமெரிக்கா காரணம் என்பதாலேயே படுகொலைகளை மன்னித்து விட்டுவிட முடியாது. கழுத்தை அறுத்தவர் பிரித்தானிய ஆங்கிலத்தில் பேசுவதால், அவர் பிரிட்டனிலிருந்து சென்றவராக இருக்கும் என்று கருதப்படுகிறது. பிரிட்டனில் வசிக்கும் இஸ்லாமிய இளைஞர்கள் மத்தியில் ஐ.எஸ். அமைப்புக்குத் தீவிர ஆதரவு இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதனால், இஸ்லாமிய இளைஞர்கள் எங்கு சென்றாலும் அவர்களைச் சந்தேகக் கண்ணுடன் பிறர் பார்க்கும் அபாயம் இருக்கிறது.

### பாவம் பத்திரிகையாளர்கள்

பத்திரிகையாளர்களைக் கொலை செய்வதால் போர் செல்லும் தடம் மாறப்போவ தில்லை. இது கொலை செய்பவர் களுக்கும் தெரியும். சில நாட் களுக்கு மையப் புள்ளிக்கு வரு வதற்காகத்தான் அவர்கள் இவ் வாறு செய்கிறார்கள். இடையில் அகப்பட்டுக்கொண்டிருப்பவர்கள் பத்திரிகையாளர்கள். ஓநாய்களுக்கும் சிங்கங்களுக் குமிடையே சிக்கிக்கொண்ட முயலே இன்றைய ஊடகவியலாளர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# படுகொலைக்குள் புதைந்திருக்கும் மர்மம்

**ஊ**டகவியலாளர் ஜேம்ஸ் ஃபோலி (James Foley) இன் தலையை வெட்டிக் கொன்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அந்தக் காட்சிகளை படமாக்கிய ஐ.எஸ்.ஐ.எஸ் , வழமை போல அந்த வீடியோவையும் யூடியூப்பில் போட்டதாக கூறப்படுகின்றது. ஆனால், அதைப் பார்த்தவர்கள் மிக மிகக் குறைவு. கூகுள் நிறுவனத்திற்கு சொந்தமான யூடியூப்பி, அந்த வீடியோவை உடனே அழித்து விட்டது.

இன்னொரு விசித்திரமான சம்பவம் நடந்தது. டுவிட்டர் நிறுவனம், அந்த வீடியோவை அல்லது தலை வெட்டும் காட்சிகளை பகிர்ந்து கொள்வோரின் டுவிட்டர் கணக்கு இடைநிறுத்தப் படும் என்று அறிவித்தது. ஏற்கனவே பகிர்ந்து கொண்டவர்கள் இரண்டு நாள்களுக்கு டுவிட்டர் பக்கம் வர விடாமல் தண்டிக்கப் பட்டார்கள்.

இந்தத் தகவலை டுவிட்டரே நேரடியாக ஊடகங்களுக்கு அறிவித்திருந்தது. ஏற்கனவே,ஐ.எஸ்.ஐ.எஸ் சிரியாவில் பலரது தலைகளை துண்டித்து, அவற்றை பகிரங்கமாக இணையத்தில் வெளியிட்டது. அவை டுவிட்டரில் பல தடவைகள் பகிர்ந்து கொள்ளப்பட்ட போதும், எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை.

ஜேம்ஸ் ஃபோலி கொலைக் காட்சிகளை காட்டும், அமெரிக்க அரசினால் தேர்ந்தெடுக்கப்பட்ட புகைப்படங்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டன. அதைத் தான் தற்போது எல்லா ஊடகங்களும், சமூக வலையமைப்புகளும் பயன்படுத்தி வருகின்றன. மேலும் ஐ.எஸ்.ஐ.எஸ் ஏற்கனவே பல நூற்றுக் கணக்கானோரின் தலைகளை வெட்டிய பொழுது கவனிக்காத ஊடகங்கள், ஒரு அமெரிக்கரின் கொலைக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுத்தன.

2012 நவம்பர் மாதம் ஜேம்ஸ் ஃபோலி கடத்தப்பட்டு காணாமல் போயுள்ளார். அப்போது, சிரிய அரச படைகளே அவரைக் கடத்திச் சென்றதாக, வட அமெரிக்க ஊடகங்கள் சில அறிவித்தன. அப்படிச் சொல்வதற்கு ஒரு காரணம் இருந்தது. ஜேம்ஸ் ஃபோலி, இதே ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாத நண்பர்கள் கொடுத்த தகவல்களைத் தான், செய்திகளாக சேகரித்து அனுப்பிக் கொண்டிருந்தார்.

**ஜேம்ஸ் ஃபோலி என்ற அமெரிக்க ஊடகவியலாளரின் கொலை, உண்மையிலேயே நடந்ததா என்பதே சந்தேகத்துக்குரியது. ஆனால், அதைக் கொண்டு உலக மக்கள் முழுவதையும் உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஆழ்த்துவதற்கு, ஊடகங்கள் அயராது பாடுபட்டன. என்ன இருந்தாலும், அமெரிக்க இரத்தம் விலை மதிப்பற்றது அல்லவா?**

ஜேம்ஸ் ஃபோலி என்ற அமெரிக்க ஊடகவியலாளரின் கொலை, உண்மையிலேயே நடந்ததா என்பதே சந்தேகத்துக்குரியது. ஆனால், அதைக் கொண்டு உலக மக்கள் முழுவதையும் உணர்ச்சிக் கொந்தளிப்பில் ஆழ்த்துவதற்கு, ஊடகங்கள் அயராது பாடுபட்டன. என்ன இருந்தாலும், அமெரிக்க இரத்தம் விலை மதிப்பற்றது அல்லவா?

அமெரிக்கா தானே வளர்த்து விட்ட 'இசிஸ்' எனும் பூதத்துடன் போரிட்டு அடக்கப் போவதாக தம்பட்டம் அடித்துக் கொண்டு திரிகின்றது. இது வரை காலமும், அமெரிக்க விமானங்கள் போட்ட குண்டுகள் 'இசிஸ்' அமைப்பை நிலைகுலைய வைக்கவில்லை. யாருமற்ற பாலைவனத்தில் குண்டு போட்டால் என்ன பிரயோசனம்?

பெஷ்மேர்கா எனப்படும் ஈராக்கிய குர்திஷ் படையினர், 'இசிஸ்' நவீன ஆயுதங்களை பயன்படுத்துவதாகவும், தம்மிடம் அந்தளவு ஆயுத பலம் இல்லை என்றும் குறைப்பட்டனர். ஐ.எஸ்.ஐ.எஸ் போராளிகள், அமெரிக்க ஹம்வீ கவச வாகனங்களை பயன்படுத்துகின்றனர். சிறிய ரக ஆயுதங்களினால் அவற்றை ஒன்றும் செய்ய முடியாது. ரயர் பார்த்துச் சுட்டால் கூட, சில்லுக்குக் காற்றுப் போன நிலையிலும் 80 கிலோ மீற்றர் தூரம் ஓடிச் சென்று நிற்கும் வல்லமை கொண்டது.

'ஹம்வீ' கவச வாகனங்களை எதிர்த்து நிற்க முடியாமல், பல இடங்களில் பெஷ்மேர்கா படையணிகள் பின்வாங்கி ஓடியுள்ளன. தற்போது அமெரிக்காவும், பிரிட்டனும் பெஷ்மேர்கா படையினருக்கு உதவி செய்யப் போவதாக வாக்குறுதி அளித்துள்ளனர். அவை கனரக ஆயுதங்களாக இருக்குமா என்று தெரியவில்லை.

கடைசியாக, மனித குலத்துக்கு விரோதமான ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பை முற்றாக அழிக்கப் போவதாக அமெரிக்க அரசு சூளுரைத்துள்ளது. இதிலே முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவெனில், ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தை அழிக்க வேண்டுமானால், சிரியாவுக்குள்ளே சென்றும் போரிட வேண்டி வரும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. சிரியாவில் ஒரு பகுதியையும், ஈராக்கில் ஒரு பகுதியையும் தனது இஸ்லாமிய அரசு என்று ஐ.எஸ்.ஐ.எஸ் அறிவித்துள்ளமை அனைவரும் அறிந்ததே.



ஆனால், எதற்காக சிரியாவுக்குள் அமெரிக்கப் படைகள் செல்ல வேண்டும்? மிகவும் பலவீனமான நிலையில் உள்ள ஈராக் அரசுடன், சிரிய அரசை ஒப்பிட முடியாது. 'இசிஸ்' போன்ற கிளர்ச்சிப் படைகளுக்கு எதிரான போரில், சிரிய அரச படைகள் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றுள்ளன. முன்பு கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்த பல பிரதேசங்களை விடுவித்துள்ளன. தற்போது, சிரியாவில் ஐ.எஸ்.ஐ.எஸ் அமைத்துள்ள இஸ்லாமிய அரசின் தலைநகரம் என்று கருதப்படும், ராக்கா நகரினை கைப்பற்றுவதற்கு முயற்சிக்கின்றன. ராக்கா மீது, சிரியப் படைகள் விமானத் தாக்குதல்களை நடத்தி, ஐ.எஸ்.ஐ.எஸ் பாதுகாப்பு அரண்களை நிலைகுலைய வைத்துள்ளது.

ராக்கா நகருக்கு அருகாமையில் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த விமானத் தளம், தற்போது சிரிய அரச படைகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. சிரியாவினுள் அமெரிக்கப் படை நடவடிக்கை எடுக்கப்படுமானால், அந்த விமானத் தளம் முக்கியமாக இருக்கும். ஐ.எஸ்.ஐ.எஸ் பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுவது தான், அமெரிக்காவின் உண்மையான நோக்கம் என்றால், அதனை சிரிய அரசுடன் சேர்ந்து செய்யலாமே? சிரிய அரச படைகளுக்கு ஆயுதங்களை வழங்கலாமே?

ஐ.எஸ்.ஐ.எஸ் என்பது யார்? அவர்களது கொள்கைகள் என்ன? குறிக்கோள் என்ன? இவை எல்லாம் அறியாமல், முன்னொரு காலத்தில் அமெரிக்கா அவர்களை ஆதரிக்கவில்லை. அமெரிக்கர்கள் அந்தளவு வெகுளிகளாக இருப்பார்கள் என்று நினைத்தால், நாங்கள் தான் அறிவிலிகள் ஆவோம். அமெரிக்கர்களின் கட்டுப்பாட்டுக்குள் அடங்காமல் சுதந்திரமாக செயற்படுவதாக நாங்கள் நம்பினாலும், அமெரிக்கர்களுக்கு அதனால் எந்த நஷ்டமும் இல்லை. சிரியாவை ஆக்கிரமிப்பதும், அதன் மூலம் ஈரானின் கழுத்தை இறுக்குவதும் தான், அமெரிக்காவின் நோக்கம். அந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு, ஐ.எஸ்.ஐ.எஸ் ஒரு சாட்டாகப் பயன் படுகின்றது. தேவை முடிந்த பின்னர் ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தை முற்றாக அழித்து விடலாம்.

இருபது வருடங்களுக்கு முன்னர், அல்கைதாவும், தலிபானும் அமெரிக்காவால் உருவாக்கப்பட்டன. பிறகு அவற்றை எதிர்த்துப் போராடப் போவதாகக் கூறி, அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தன. அதையெல்லாம் நாங்கள் இப்போது மறந்து விட்டோம்.

எல்லாம் அவன் செயல்!

அவனன்றி ஓர் அணுவும் அசையாது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருவறுக்கும் அபிவிருத்தி

**வெலிவேரியா, பெலியத்த போன்ற பகுதிகளுக்கு ஏற்பட்டதைப் போன்ற ஆபத்து இப்போது யாழ்ப்பாணத்திலும் தோன்றியுள்ளது. சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவு ஒயில் நிலத்தடி நீரில் கலந்து அந்தப் பகுதி கிணற்றுநீரை மாசுபடுத்தி வருகிறது. இது தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் நீண்ட காலமாகவே முறைப்பாடுகள் செய்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.**

கடந்த வருடம் கம்பஹா மாவட்டத்திலுள்ள வெலிவேரியா பகுதியில் ஒரு இறப்பர் தொழிற்சாலைக் கழிவுகளால் கிணற்று நீர் மாசடைவதை எதிர்த்து அந்தப் பகுதி மக்கள் பெரும் போராட்டம் ஒன்றை நடத்தினர். தமது குடிநீர் மாசுபடுவதைத் தடுக்க அந்த மக்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அரசாங்கம் வழங்கிய பரிசு துப்பாக்கிப் பிரயோகம். அங்கு இராணுவத்தினர் களமிறக்கப்பட்டு, அவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்தனர். எழுபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை கட்டளையிட்டு நடத்திய பிரிகேடியர் தர இராணுவ அதிகாரிக்கு அரசாங்கம் பதவி உயர்வு வழங்கி வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றின் பாதுகாப்பு அதிகாரியாக அனுப்பி அவரைக் கௌரவித்துள்ளது.

அதே வேளையில் குடிநீர் கோரிய மக்களைச் சமாளிக்கும் வகையில் அங்கு ஒரு குழாய் நீர்த் திட்டம் உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டு குடிநீரும் வழங்கப்படுகிறது. ஆனால் அந்த மக்களின் கிணற்று நீர் மாசடைவதைத் தடுக்க எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்தப் பகுதியில் நீர் வளம் தொடர்ந்து அழிந்து கொண்டே போகிறது.

இதே போன்று பெலியத்தயிலும் ஒரு தொழிற்சாலையால் நீர் மாசடைவதை எதிர்த்து மக்கள் வீதி மறிப்புப் போராட்டங்களை நடத்தினர். வீதித் தடையை அகற்றச் சென்ற ஒரு பொலிஸ் அதிகாரி ஒருவர் மரம் விழுந்து உயிரிழந்தார். அதைக் காரணம் காட்டி ஆர்ப்பாட்டக்காரர்கள் பலர் கைது செய்யப்பட்டதன் மூலம் அந்தப் போராட்டம் முறியடிக்கப்பட்டது.

இப்படியாக தொழிற்சாலைக் கழிவுகளால் நிலமும், நீரும் மாசடைவதற்கு எதிரான கண்டனங்கள் நாட்டின் அபிவிருத்தியை விரும்பாதவர்களின் கூக்குரல்கள் எனக் கீழ்மைப்படுத்தப்படுகின்றன.

மேற்கு நாடுகளில் தொழிற்சாலைகளின் கழிவுகள் வடிகட்டப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டே வெளியே அனுப்பப்படுகின்றன. அதன் காரணமாக அங்கு நிலமோ, நீரோ மாசடைவதில்லை. அதற்காகச் செலவு செய்யப்படும் போது முதலீட்டாளர்கள் பெறும் லாபம் குறைவடைகிறது. கொள்ளை இலாபம் ஈட்டுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட இலங்கையின் முதலீட்டாளர்கள் நிலமோ, நீரோ மாசுபடுவதையிட்டுக் கவலைப்படுவதில்லை. அத்தோடு அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும் அவர்களுக்கு அனுசரணையாகச் செயற்பட்டு வருகின்றனர்.

**தமது குடிநீர் மாசுபடுவதைத் தடுக்க அந்த மக்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அரசாங்கம் வழங்கிய பரிசு துப்பாக்கிப் பிரயோகம். அங்கு இராணுவத்தினர் களமிறக்கப்பட்டு, அவர்கள் மேற்கொண்ட தாக்குதலில் மூன்று பேர் உயிரிழந்தனர். எழுபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை கட்டளையிட்டு நடத்திய பிரிகேடியர் தர இராணுவ அதிகாரிக்கு அரசாங்கம் பதவி உயர்வு வழங்கி வெளிநாட்டு தூதரகம் ஒன்றின் பாதுகாப்பு அதிகாரியாக அனுப்பி அவரைக் கௌரவித்துள்ளது.**

இப்படியான நிலையில் குடிநீர் கோரி மக்கள் போராட்டங்களை நடத்தாமல் தடுப்பதற்காகவே குழாய் நீர் விநியோகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெலிவேரியா, பெலியத்த போன்ற பகுதிகளுக்கு ஏற்பட்டதைப் போன்ற ஆபத்து இப்போது யாழ்ப்பாணத்திலும் தோன்றியுள்ளது. சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவு ஒயில் நிலத்தடி நீரில் கலந்து அந்தப் பகுதிக் கிணற்றுநீரை மாசுபடுத்தி வருகிறது. இது தொடர்பாக அந்தப் பகுதி மக்கள் நீண்ட காலமாகவே முறைப்பாடுகள் செய்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சில மாதங்களின் முன்பு அங்கு சேகரிக்கப்பட்ட குடிநீர், பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்ட போதும் அது குறித்த எந்தவித முடிவும் வெளிவரவில்லை.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்ட ஒரு அரச அதிகாரி “இந்தப் பிரதேசம் ஒரு விவசாயப் பூமியாதலால், விவசாயிகள் நீரிறைக்கும் இயந்திரங்களைப் பாவிப்பதால் அங்கு கிணறுகளில் எண்ணெய் கலந்திருக்கக் கூடும்” எனத் தெரிவித்துள்ளார்.

இப்படி ஒரு கருத்தை வெளியிடுமளவுக்கு அவர் முட்டாளா? அல்லது தனது கருத்தை நம்புமளவுக்கு மக்களை முட்டாள்கள் என்று கருதுகிறாரா? அல்லது



இப்படியான கருத்துக்களை வெளியிட்டு சில அதிகாரபீடங்களைத் திருப்திப்படுத்த முனைகிறாரோ?

சில சமயம் மின்சார நிலையத்திலிருந்து வெளியேறும் கழிவுகளால் கிணற்றுநீர் மாசடையவில்லை என ஒரு ஆய்வறிக்கை வெளிவருவதற்கான முன்னறிவித்தலாகவும் இது இருக்கக் கூடும்.

சிலவேளைகளில் அந்தப் பகுதி மக்களுக்கு பவுஸர் மூலமோ, குழாய் நீர் மூலமோ குடிநீர் வழங்கப்படும் என வாக்குறுதிகளும் வழங்கப்படலாம். அது தொடர்பாக அரசசார்பு அரசியல்வாதிகள் ஜனாதிபதியிடம் பேச்சு நடத்தி இரணைமடு நீரை யாழ்ப்பாணத்துக்கு விரைவாகக் கொண்டு வரும்படி வலியுறுத்தலாம். ஆனால் சிறந்த உப உணவுப் பயிர் விளைச்சல் கொண்ட அந்தச் செம்மண் பூமி தரிசாவது பற்றியோ விசாயிகளின் வாழ்வாதாரம் அற்றுப் போவதைப் பற்றியோ எவரும் கவலைப்படப் போவதில்லை.

இப்படி ஒரு புறம் சுன்னாகம் மின்சார நிலைய கழிவுகளால் நீர் மாசடைய மறுபுறம் கடல் நீர் உட்புகுந்து நன்னீரை உப்பு நீராக்கும் ஆபத்தும் ஏற்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சீமெந்து ஆலை உள்நாட்டுத் தேவைகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு சீமெந்தை உற்பத்தியாக்கும் அளவுக்கே அமைக்கப்பட்டது. இப்போது அது வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு ஏற்றுமதி நோக்கி பெருமளவு உற்பத்தி செய்யும் வகையில் விரிவுபடுத்தப்படவுள்ளது. இதன் காரணமாகப் பெருமளவு சுண்ணக்கல் அகழப்படும். எனவே கடல் நீர் உட்புகுந்து நிலக்கீழ் நீரை உவராக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக வலிகாமத்திலுள்ள முழுக்கிணறுகளுமே உவரடையும் அபாயம் எழுந்துள்ளது.

ஒரு புறம் மின்சார நிலையக் கழிவுகள், மறுபுறம் கடல் நீர் உட்புகுதல் என வலிகாமம் மக்களுக்குக் குடிநீரே கிடைக்காத நிலை ஏற்படப்போகிறது. அதைச் சமாளிக்கவே இரணைமடுவிலிருந்து குடிநீர் வழங்கல் என பெரும் கண்துடைப்பு நாடகம் ஒன்று அரங்கேற்றப்படுகிறது.

ஒட்டு மொத்தத்தில் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு எமது பூமி பாலைவனமாகும் அதே வேளையில் நாம் குடிநீருக்குக் கூட பிறரிடம் கையேந்த வேண்டிய பரிதாப நிலை தோன்றப் போகிறது.

அதே வேளையில் இரணைமடு நீர் விநியோகம் மூலம் கிளிநொச்சிப் பகுதியில் விவசாய நடவடிக்கைகள் பாதிப்புக்குள்ளாக நேரிடும். இதனால் எதிர்காலத்தில் எமது உணவுத் தேவைக்கும் தென்னிலங்கையையே நாம் நம்ப வேண்டிய நிலை தோன்றும்.

அபிவிருத்திகள், நவீன வசதிகள் என நன்மை செய்வதாகக் கூறி எமது வளங்களை தூரநோக்கற்ற வகையில் அழித்து எமது பூமியைப் பாலைவனமாக்கும் முயற்சிகள் பற்றி நாம் எச்சரிக்கையோடு இருப்பதன் மூலமே எம்மையும் எமது வளத்தையும் காத்துக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பினை ஏவி அழகு பார்த்தல்

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:
021 567 7609
sudarolijaffna@gmail.com

வடக்கு மாகாண சபையில் ஆளுநருக்கும் முதலமைச்சருக்குமிடையிலான முறுகல் புள்ளி இப்போது வேறு ஒரு இடத்தில் மையம் கொண்டிருக்கிறது. நேரடியாகத்தானே எல்லா விடயங்களிலும் முரண்படாமல் தனக்குக் கீழ் உள்ள அதிகாரிகளை வைத்து வடக்கு மாகாண ஆளுநர் தன்னுடைய சதுரங்க வேட்டையைத் தொடங்கியுள்ளார். குறிப்பாக பிரதம செயலாளரை வைத்து தான் நினைத்ததை ஆளுநர் சாதித்துக் கொள்கிறார் என்ற குற்றச்சாட்டு கூட்டமைப்பிடம் உண்டு.

வடக்கு மாகாண சபையின் அதிகாரம் கூட்டமைப்பின் வசம் வந்தவுடனேயே வடமாகாண பிரதம செயலாளர் பல முட்டுக்கட்டைகளை போட்டார் எனவும் இதனால் மாகாண சபைச் செயற்பாடுகளை சரிவர நிறைவேற்ற முடியாமல் இருப்பதாகவும் கூட்டமைப்பினரும் வடக்கு முதலமைச்சரும் குற்றம் சாட்டியிருந்தனர். முதலமைச்சருக்கும் பிரதம செயலாளருக்கும் இடையேயான பனிப்போரின் உச்சக் கட்டமாக முதலமைச்சர் தனக்குக் கட்டளையிடுவது சரியாகாது என்று கூறி பிரதம செயலாளர் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.இதில் பிரதம செயலாளருக்கு சார்பாகவே தீர்ப்பும் வந்திருந்தது. இந்த நிலையில் முதலமைச்சரும் பிரதம செயலாளரும் புரிந்துணர்வோடு செயற்படுவதே மாகாண சபையின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதாக அமையும் என்று நீதிமன்றம் ஆலோசனையும் கூறி இருந்தது.

இந்த ஆரோக்கியத்தின் வெளிப்பாடாக அண்மையில் முதலமைச்சரின் அலுவலகப் பாதுகாப்பு, சுத்திகரிப்புச் சேவைகள் என்பன திடீரென இடைநிறுத்தப்பட்டன. மாகாணப்பிரதமசெயலாளரின் தன்னிச்சையான நடவடிக்கையே இத்தகைய செயலுக்கு காரணம் என்று முதலமைச்சர் செயலகத்தால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டி ருந்தது. ஆனால் அதனை மறுத்த மாகாணப் பிரதம செயலாளர் "முதலமைச்சரின் செயலாளரின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாகவே முதலமைச்சர் அலுவலக பாதுகாப்பு, சுத்திகரிப்புச் சேவைகள் நிறுத்தப் பட்டமைக்குக் காரணம்" என்று பந்தை திருப்பி அடித்துள்ளார். இதனால் உண்மையாகவே யாரில் தவறு என்று தெரியாமல் பொதுமக்கள் குழம்பிப் போயுள்ளார்கள். அத்தோடு இந்த விடயம் இன்னொரு சந்தேகத்தையும் மக்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

முதலமைச்சரின் அலுவலகப் பணிகளைக் கூட ஒழுங்காக செய்ய முடியாத அல்லது செய்ய விடாத மாகாண சபையால் எப்படி மக்களின் நலனைப் பேணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்? என்பதே அந்தச் சந்தேகம்.மாகாண சபைக்கும் மத்திய அரசு அதிகாரிகளுக்கும் இடையேயான அதிகாரக் குடுமிப்பிடிச் சண்டையால் பல திட்டங்கள் முடங்கிப் போகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. பிரதம செயலாளர் என்ற அம்பை மாகாண சபையை நோக்கி ஏவிவிட்டு வேடிக்கை பார்க்கிறார் ஆளுநர். உண்மையில் அவர் நினைத்திருந்தால் இந்தப் பிரச்சினையில் தலையிட்டு சுமூகமாக தீர்வினைக் கண்டிருக்க முடியும். ஆனால் தனக்கு எதுவும் தெரியாதது போலவே ஆளுநர் நடந்து கொள்வதன் ஊடாக பிரச்சினையை மேலும் வளர்த்து மாகாண சபை செயற்றிறன் அற்றது என்று மக்களே குறை கூறும் அளவுக்கு நிலைமையைக் கொண்டு செல்லவே அவர் விரும்புகிறார் போலும்.

# யாருக்கு ஆலோசனை?

-குறுக்கால்போவான்

"தமிழர்கள் பொலிஸ் அதிகாரத்தைக் கோரக்கூடாது" இவ்வாறு ஈழத்தமிழர்களைப் பார்த்து ஒரு குரல் எச்சரித்திருக்கிறது. இந்தக் குரலுக்குச் சொந்தக் காரர் எந்த நேரமும் இனவாதத்தைக் கக்கும் பொதுபலசேனா, ஜாதிக ஹெலஉறுமய போன்ற கட்சிகளின் உறுப்பினரல்ல. அல்லது எப்போதும் சண்டித்தனத்துக்கு அறைகூவல் விடுக்கும் மேர்வின் சில்வா, விமல் வீரவன்ச போன்றோருடைய குரலும் அல்ல. மாறாக இந்த இனவாதக் குரலின் உரிமையாளர் காணாமல் போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்கவென நியமிக்கப்பட்டுள்ள சர்வதேச நிபுணர் அவ்டாஸ் கௌஷல்.

ஜெனீவாவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு காட்டிய அக்கறையீனம் சர்வதேசத்துக்கு சினமூட்டியது. இதைவிட இலங்கையில் இனப்பிரச்சினை தொடர்பில் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை ஆராயவென நேரில் வந்த ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவமானப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்டார். இதற்குப் பதிலடியாக இலங்கை அரசு இறுதிப் போரில் போர்க்குற்றங்களில் ஈடுபட்டதா என்பது குறித்து ஆராய சர்வதேச நிபுணர் குழுவை ஐ.நா. நியமித்தது. ஆனால் இந்தச் சிக்கலில் இருந்து தப்புவதற்காக அவசர அவசரமாக இலங்கை ஜனாதிபதி தானும் ஒரு சர்வதேச




நிபுணர் குழுவை அமைத்துள்ளதாக அறிவித்தார். இந்தக் குழு காணாமல் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்குவதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிபுணர் குழுவில் தான் அவ்டாஸ் கௌஷல் உள்வாங்கப்பட்டிருந்தார்.

உண்மையில் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை கூறுவது மட்டுமே அவரது பணி. ஆனால் தான் எதற்காக நிபுணர் குழுவுக்கு உள்வாங்கப்பட்டாரோ அதை மறந்து விட்டு ஈழத்தமிழர்களுக்கும் இந்தியாவுக்கும் ஆலோசனை கூறப் புறப்பட்டிருக்கிறார் அவ்டாஸ் கௌஷல். அண்மையில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இந்த ஆலோசனை முத்துக்களை அள்ளித் தெளித்திருந்தார்.

"இந்தியா இலங்கையுடன் வேண்டுமானால் பேச்சு நடத்தலாம்.ஆனால் இலங்கை எப்படி நடக்க வேண்டும் என்று இந்தியா உத்தரவு போட முடியாது. அதே போன்று தாங்கள் இந்தியாவின் தொப்புள் கொடி உறவுகள் என்பதை மறந்து விட்டு இலங்கையர்கள் என்ற எண்ணம் வரப் பெறவேண்டும். நடைமுறைக்கு சாத்தியமில்லாத [illegible] தமிழர்கள் [illegible] தான் இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்னமும் இழுபறி நிலையிலே இருக்கின்றது. எனவே தீர்வினை விரைவுபடுத்த வேண்டுமானால் அதற்கு தமிழர்கள் பொலிஸ் அதிகாரத்தைக் கோரக்கூடாது" என்று தன்னுடைய எண்ணங்களையெல்லாம் பட்டவர்த்தனமாக்கியிருக்கிறார் அவ்டாஸ் கௌஷல்.

அவரின் வாயிலிருந்து உதிர்ந்த இந்த வார்த்தைகள் பேரினவாதிகளின் குரல் வளையிலிருந்து ஒலிக்கும் தொனியோடு புறப்பட்டிருந்தன. இப்படிப்பட்ட மனநிலையோடு இருப்பவர் எப்படி நடுநிலையாக விசாரணைகளை மேற்கொண்டு ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு ஆலோசனை வழங்க முடியும்? இனவாதிகளைப் போன்று சிறுபான்மையினரின் நலன்களை கொச்சைப்படுத்தும் குணாதிசயம் கொண்ட ஒரு நபரால் மேற்கொள்ளப்படும் விசாரணைகளும் அதன் முடிவுகளும் பேரினவாதத்துக்குச் சார்பாகவே அமையும் என்பது இப்போதே தெரிந்து விட்டது.

தனக்கு மிகப் பொருத்தமான ஒரு நபரைத் தான் மஹிந்த ராஜபக்ஷ தெரிவு செய்திருக்கிறார் என்பதை அவ்டாஸ் கௌஷலின் கூற்று தெளிவு படுத்திவிட்டது. வாங்கும் கூலிக்கு வஞ்சகமில்லாமல் குரல் கொடுக்கும் அவ்டாஸ் கௌஷல் ஆயுள் முழுவதும் இலங்கையின் சர்வதேச ஆலோசகராக நியமிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை நரியும் ஊளையிடும்

அனுஷ்கன்

"முன்னாள் இராணுவ ஜெனரல் சந்திரசிறி இன்று ஒரு பொதுமகனே . அவர் இராணுவ உடையை எப்போதோ கழற்றிவிட்டார். ஆகவே சாதாரண பொதுமகன் ஒருவரையே நான் மாகாண ஆளுநராக நியமித்திருக்கிறேன்" என்ற விநோத விளக்கம் ஒன்றை ஊடகவியலாளர்களுக்கு அண்மையில் அளித்திருக்கிறார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ. அத்துடன் மட்டும் நின்று விடாமல் "மாகாணங்களுக்கு எல்லா அதிகாரங்களும் வழங்கப்பட்டு விட்டன. அவற்றைக் கொண்டு மாகாண சபைகளைத் திறம்பட நடத்த முடியும். ஆயினும் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் நான் கூட எனது சொந்த ஊருக்குப் போக முடியாத நிலை ஏற்பட்டு விடும்" என்றும் ஜனாதிபதி நீட்டி முழக்கத் தவறவில்லை. ஜனாதிபதியின் அமைந்திருக்கிறது. ஆகவே மாகாண பிரதம செயலாளரும் மாகாண முதலமைச்சருக்கும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும் என்ற ஆலோசனையையும் உயர்நீதி மன்றம் கடந்த மாதம் வழங்கியிருக்கிறது.

இந்த விரக்தியில் தானோ என்னவோ "மத்திய அரசிடமிருந்து எதையும் எதிர்பார்த்துக் கொண்டிருக்க நாம் தயாரில்லை. இருக்கின்ற வளங்களை பயன்படுத்தியே

**இராணுவ அதிகாரியாக இருந்த ஒருவர் நிர்வாகத்துறைக்குள் பிரவேசிக்கும் போது அவரின் அணுகு முறைகள் எப்படியிருக்கும் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ. ஏ. சந்திரசிறி தான்.**

யாப்பின் 30 ஆவது உறுப்புரையில் கூறப்பட்டுள்ளதன் படி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஒருவர் தனக்குக் கீழ் இருக்கும் நாடாளுமன்றம் மீது எத்தகைய அளவுக்கதிகமாக கட்டுப்பாடுகளை விதிக்கமுடியுமோ அதைவிட அதிகமாக ஆளுநரால் மாகாண சபை மீது கட்டுப்பாடுகளை விதிக்க முடியும்" என்பது 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் உறுப்புரைகளை தெளிவாக

மாகாணசபைக்கு செய்திகளை விடுத்தல், மாகாணசபையைக் கூட்டல், கலைத்தல் போன்ற அதிகாரங்களும் ஆளுநரின் கைகளிலேயே உள்ளன. இப்படி மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட ஆளுநரின் கைகளில் அளவுக்கதிகமான அதிகாரங்கள் இருப்பதாலும் வடக்கு மாகாண ஆளுநர் ஒரு இராணுவ அதிகாரியாக இருப்பதாலுமே பெரும் சிக்கலுக்குள்ளே செயற்பட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் வடமாகாண சபை தள்ளப்பட்டிருக்கிறது.

இதனாலேயே சிவில் நிர்வாகத்துறை சார்ந்த அதிகாரி ஒருவரை மாகாணசபைக்கு ஆளுநராக நியமிக்க வேண்டும் என்ற குரல்கள் பல்வேறு திக்குகளில் இருந்தும் ஒலிக்கின்றன. அப்படி மாகாண சபைக்கு பொதுநிர்வாகத் துறையைச் சேர்ந்த ஒருவரை ஆளுநராக நியமிப்பதன் மூலம் மாகாண ஆட்சிமுறையில் உள்ள மத்திய அரசின் அழுங்குப்பிடி நீங்கிவிடும் என நினைப்பதும் மகா முட்டாள் தனம். ஆயினும் இப்போதிருப்பதை விடவும் ஓரளவுக்கேனும் தளர்வு நிலை ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பே இவ்வாறான கோரிக்கைக்கு காரணமாக இருக்க முடியும்.

சிவில் அதிகாரி ஒருவரை மாகாண ஆளுநராக நியமித்தாலும் அவரும் ஜனாதிபதியின் அல்லது மத்திய அரசின் உத்தரவுகளையே நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும். எனவே ஜனாதிபதி என்ன நினைக்கிறாரோ அதையே தான் இவரும் செயற்படுத்த முனைவார். இருப்பினும் ஒரு இராணுவ அதிகாரியைப் போல தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்று நிற்காமல் ஓரளவுக்கேனும் மாகாண சபையோடு இணங்கிச் செயற்படும் போக்கு பொதுநிர்வாக துறையிலிருந்து வந்த ஒருவருக்கு இருக்கும். ஆனால் அதற்கு தாம் தயாராக இல்லை என்பதையே மீளவும் வடக்கு ஆளுநராக சந்திரசிறியை நியமித்ததன் மூலம் அதிகாரத் தரப்பு வெளிப்படுத்தியுள்ளது. ஆயினும் தங்களுடைய நியமனம் ஜனநாயகத் தன்மை வாய்ந்தது என்று காட்டுவதற்காக சந்திரசிறி ஒரு பொதுமகனே என்று வாய் கூசாமல் ஜனாதிபதி விளம்பியிருக்கிறார்.

இந்த விளக்கங்களிலிருந்து மாகாணசபை நிர்வாக விடயத்தில் அரசின் எதிர்கால ராஜதந்திர நகர்வுகள் எப்படியிருக்கும் என்று ஊகிக்க முடிகிறது.

இராணுவ அதிகாரியாக இருந்த ஒருவர் நிர்வாகத்துறைக்குள் பிரவேசிக்கும் போது அவரின் அணுகு முறைகள் எப்படியிருக்கும் என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ. ஏ. சந்திரசிறி தான்.

அவர் ஆளுநராகப் பதவியேற்ற பின்னர் வடக்கு மாகாண சபையால் என்ன சாதிக்க முடிந்தது என்று கேட்டால் அதற்கு விடை பூச்சியம் என்பதாகவே இருக்கும் . மத்திய அரசின் அனுமதியில்லாமல் துரும்பைக் கூட அசைக்க முடியாத நிலையே மாகாணசபை நிர்வாகத்தில் காணப்படுகிறது. ஒரு மாகாண பிரதம செயலாளரைக் கூட கட்டுப்படுத்தக் கூடிய நிர்வாக அதிகாரம் மாகாண முதலமைச்சருக்கு இல்லை என்ற உண்மையை ஏற்கனவே உயர் நீதிமன்றம் போட்டுடைத்து விட்டது. மாகாணப் பிரதம செயலாளரையே கட்டுப்படுத்தக் கூடிய ஆற்றல் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவுக்குத் தான் இருக்கின்றதே தவிர அது மாகாண முதலமைச்சருக்கு கிடையாது என்றே உயர் நீதிமன்ற வியாக்கியானம்

சேவையாற்ற வேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டிருக்கிறோம்" என

வாசிக்கும் ஒருவருக்கு இலகுவாகப் புரியும். அங்கு கூட ஜனாதிபதி மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை 2/3 பெரும்பான்மையுடன் கொண்டு வரப்பட்டால் ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாத சூழல் ஒன்று



வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனே கூறியிருக்கிறார். மொத்தத்தில் ஒரு பொம்மை ஆட்சியாகவே மாகாண சபை இருக்கிறது. அதன் சூத்திரக் கயிறு மத்திய அரசின் கைகளிலேயே இருக்கிறது என்ற உண்மை தெட்டத் தெளிவாகிவிட்டது .

இராணுவ நிர்வாகமும் என்பது பொதுநிர்வாகமும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட தன்மையைக் கொண்டவை. "1978 ஆம் ஆண்டு அரசியல்

ஏற்படும். ஆனால் மாகாணசபையில் ஆளுநர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று கொண்டு வரப்பட்டால் அதுவும் ஜனாதிபதியிடமே அனுப்பப்படும் .ஆகவே மாகாணசபையில் சர்வவல்லமையோடு இருக்கும் ஆளுநரை பதவியிறக்குவதா இல்லையா என்ற இறுதி முடிவையும் ஜனாதிபதியே கொண்டிருக்கிறார் . அத்துடன் சபையின் கூட்டங்களுக்கு வருதல், உரையாற்றுதல், சட்ட மூலங்களுக்கு கைபெழுத்திடல்,

என்னதான் நரிக்கு வெள்ளை வர்ணம் பூசினாலும் அது இரையைக் கண்டவுடன் ஊளையிடாமலா இருக்கப் போகிறது? ஊளையிடுதல் அதன் பரம்பரைக் குணம். ஆகவே அது எந்த வர்ணம் பூசி தன்னை அப்பாவியாகக் காட்டிக் கொண்டாலும் தருணம் வரும் போது தன்னுடைய உண்மைக்குணத்தை வெளிப்படுத்தவே செய்யும். இது வடக்கு மாகாண ஆளுநர் விடயத்துக்கும் பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொடூரமான காதல் பரிசு

காதலிப்பவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் காதலர்களுக்கு ஏதாவது மறக்க முடியாத பரிசுகளை வழங்கி அவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்த வேண்டும் என்ற விருப்பம் இருப்பது இயல்பே. ஆனால் படத்தில் உள்ள இந்தப் பெண்களுக்குக் கிடைத்த காதல் பரிசு மிகக் கொடுமையானது. அவர்கள் சாகும் வரை இந்த பரிசு நிலைத்திருக்கக் கூடியது.

இவர்கள் எல்லோருமே காதலால் திராவக (அசிட்) வீச்சுக்கு உட்பட்டவர்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கதைகள் உண்டு. எனினும் எல்லாக் கதைகளுக்கும் அடிநாதம் காதல் தான். பெரும்பாலும் இவர்களில் அழகில் மயங்கி ஒருதலையாகக் காதலித்த இளைஞர்களின் காதலை இவர்கள் ஏற்றுக் கொள்ளாததால் "எனக்குக் கிடைக்காதவள் வேறு எவருக்கும் கிடைக்கக் கூடாது" என்ற எண்ணத்தில் நடத்திய கொடூரம் தான் இந்த திராவக வீச்சுகளுக்கு முக்கிய காரணம். திராவக தாக்குதலால் முகம் எரிந்து அழகை இழந்து வாழ்வையே தொலைத்து விட்டு நின்ற யுவதிகளுக்கு இந்தியாவில் டெல்லியைச் சேர்ந்த தன்னார்வ அமைப்பு ஒன்று அடைக்கலம் கொடுத்துள்ளது. அத்தோடு இவர்களுக்கு வாழ்வு கொடுக்க விரும்பும் இளைஞர் களைக் கண்டு பிடித்து இந்தப் பெண்களுக்கு மறுவாழ்வு கொடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

# வேண்டாக் காதலை வெறுப்பது எப்படி?



03. அவர் காதலை நிராகரிப்பதாக நீங்கள் கூறிய பிறகும் மீண்டும் உங்களிடம் தெரிவித்தால், நீங்கள் அவரிடம் உறுதியாகக் கூறிவிட வேண்டும். இதுதான் அவரைக் கையாளுவதற்கான ஒரே வழி. இதுதான் காதலை நிராகரிப்பதற்கான இன்னலான வழியாகும். நீங்கள் அவரை விரும்புவதற்கான வாய்ப்புகள் குறைவு என்பதைத் தெரிவிக்க வேண்டும். உங்களின் எரிச்சல் மூலமாக தெரிவிக்க வேண்டும்.

04.உங்களை உண்மையாக நேசிப்பவர்கள் என்றால் இதற்குச் சற்று பயப்படுவார்கள். மீண்டும் மீண்டும் வற்புறுத்தல் செய்தால் நீங்கள் அவரை வெறுக்கத் தொடங்கி விடுவீர்கள் என்பதை அவரிடம் கூறுங்கள். இதுவே தெளிவான முறையில் காதலை நிராகரிப்பதற்கான வழியாகும். மிகவும் கடுமையாகக் கூறவேண்டாம்.

05.நீங்கள் புத்திசாலித்தனமாக கையாள நினைத்தால், நடிப்பது தான் காதலை நிராகரிப்பதற்கான சிறந்த வழியாகும். அவரிடம் சிறிது நடிக்க வேண்டும். எதிர்பாராத சந்தர்ப்பத்தில் எதிர்பாராத நபரிடம் இருந்து காதல் விருப்பம் வந்தால், இந்தக் காதல் உங்களை மிகவும் வருத்தப்படச் செய்துவிட்டது என்று கூறுங்கள்.

06.எதுவுமே முடியவில்லை என்றால், காதலை நிராகரிப்பதற்கான ஒரே வழி புறக்கணிப்பது மட்டுமே. நீங்கள் அவரை வேண்டுமென்றே புறக்கணிக்கின்றீர்கள் என்பதை அவருக்கு உணர்த்த வேண்டும். சிலர் இதை அவமானமாக எண்ணி உங்களை விட்டு விலகிவிடுவார்கள்.

07.நீங்கள் அவர் காதலை நிராகரிப்பது எனது முடிவு செய்து விட்டீர்கள் என்றால், அவருடனான தொடர்பை முற்றிலுமாக நீக்குவதற்கு உங்கள் நண்பர்கள் கூட்டத்தில் இருந்து அவரை நீக்கிவிடுங்கள். நீங்கள் அவருடன் நண்பராக இருக்க முடியாது என்பதைக் கூறிவிடுங்கள். நீங்கள் அவரோடு நண்பராக இருப்பதற்கு அவர் உங்களை நண்பராக எண்ணி நண்பராக நடத்தினால் மட்டுமே நீங்கள் இருவரும் நண்பர்களாக இருக்க முடியும். இந்த அறிவுரைகள் உங்களுக்கு கண்டிப்பாக உதவி புரியும். முயற்சி செய்யுங்கள்!


# மாட்டிக் கொள்ளாமல் காதலிக்க...!

தப்பித்தல்-- 7

முகப்புத்தகத்தில் உரையாடுவது காதலர்களின் பொழுது போக்குகளில் முக்கியமானது. ஆனால் இப்படி உரையாடும் போது அவர்கள் "ஒன்லைனில்' இருப்பதை மற்றவர்கள் கண்டு பிடித்து விட முடியும். எனவே தனியே உங்கள் காதலர்களுக்கு மட்டும் நீங்கள் முகப்புத்தகத்தில் உலவுவதை அறியும் வண்ணம் செய்வதற்கான வசதிகள் முகப்புத்தகத்தில் உண்டு. எனவே அத்தகைய ஏற்பாடுகளைச் செய்து கொள்வது உங்கள் காதலுக்கு பாதுகாப்பானது.

அப்படி உரையாடும் போது ஆர்வக் கோளாறில் முகப்புத்தகத்தில் பொதுவெளியில் பிறரால் பகிரப்படும் அல்லது பதிவேற்றப்படும் விடயங்களை நீங்கள் 'லைக்' செய்தாலோ அல்லது பகிர்ந்தாலோ நீங்கள் முகப்புத்தகத்தில் இருக்கும் விடயம் மற்றவர்களுக்குத் தெரிந்து விடும். ஆகவே காதலியோடு உரையாடும் போது இந்த விடயத்தில் அவதானமாக இருக்க வேண்டும்.


சிலர் காதலியோடு முகப்புத்தகத்தில்




உரையாடிக் கொண்டே ஏனைய நண்பர்கள், உறவினர்களோடும் உரையாடும் பழக்கம் கொண்டவர்கள். எனவே உரையாடும் அவசரத்தில் ஒருவருக்கு அனுப்ப வேண்டிய செய்தியை இன்னொருவரின் உரையாடல் பெட்டிக்குள் அனுப்பிவிடக் கூடும். எனவே இதன் போது நிதானமும், அவதானமுமே உங்கள் காதலை காட்டிக் கொடுக்காமல் காக்கும்.

இதே தடுமாற்றம் செல்போன் உபயோகிக்கும் போது காதலர்களுக்கு ஏற்படுவதுண்டு. நண்பர்களின் குறுஞ்செய்திகளும் காதலரின் குறுஞ்செய்தியும் ஒன்றாக வருமிடத்தில் அவசரத்தில் நண்பருக்கு அனுப்ப வேண்டிய குறுஞ்செய்தியை காதலருக்கும், காதலருக்கு அனுப்ப வேண்டிய குறுஞ்செய்தியை நண்பருக்கும் மாறி அனுப்பி மாட்டிக் கொண்டவர்கள் பலர். இதனால் பல சிக்கல்களும் காதலர்களுக்கிடையே சச்சரவுகளும் சந்தேககங்களும் தோன்றக் கூடும். எனவே இத்தகைய இக்கட்டு நிலை ஏற்படாதிருக்க உங்களுக்கு வந்த குறுஞ்செய்தியை படித்தவுடன் அதில் உள்ள பதிலளிக்கும் தெரிவினைப் பயன்படுத்தி உங்கள் குறுஞ்செய்தியை அனுப்புவதன் மூலம் தவறான தகவல் பரிமாற்றத்தை தவிர்த்துக் கொள்ளலாம்.

(ஆலோசனைகள் தொடரும்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் புலிவாசம்

-அக்கினிகுமாரன்

**இந்தியார்விலுள்ள சாதனைக் கட்சியின் தலைவரான சுப்பிரமணிய சுவாமி, "இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை" எனக்கூறி வாங்கிய கூலிக்கு வஞ்சகமில்லாமல் மாரடித்துப் போயுள்ளார். "என்னைக் கேட்டுத்தான் தமிழ்தேசியக் கூட்டமைப்பை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்திப்பார்"**

இலங்கையில் இடம்பெற்ற மூன்று நாள் பாதுகாப்புக் கருத்தரங்கில் கலந்து கொள்ள வந்த ஜனதாக் கட்சி என்ற ஒரே ஒரு நபரைக் கொண்ட இந்தியாவிலுள்ள சாதனைக் கட்சியின் தலைவரான சுப்பிரமணிய சுவாமி, "இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை" எனக்கூறி வாங்கிய கூலிக்கு வஞ்சகமில்லாமல் மாரடித்துப் போயுள்ளார். "என்னைக் கேட்டுத்தான் தமிழ்தேசியக் கூட்டமைப்பை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சந்திப்பார்" என அவர் சவால் விட்ட குரல் காற்றில் கரையேற முன்பே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மத்திய அரசின் அழைப்பின் பேரில் இந்தியா சென்று விட்டனர். இப்படி மூக்குடைபடுவதும் மொட்டைத் தலையில் குட்டு வாங்குவதும் அவருக்கு இது தான் முதல் தடவையல்ல. ஆனால் சுவாமி இவை பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. அவர் எப்போதுமே வாங்கிய கூலிக்கு ஏற்ற விதமாக உளறிக் கொட்டிக் கொண்டேயிருப்பார். இலங்கை ஆட்சியாளர்களும் பாதுகாப்பு செயலரும் அவர் தான் இந்தியாவின் குரல் என்பது போன்ற ஒரு மாயையை உருவாக்கி சிங்கள மக்களை ஏமாற்றிக் கொண்டேயிருப்பர்.

இந்த நாடகத்தின் அடுத்த காட்சியை அரங்கேற்றியுள்ளார் சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிரான ஆய்வாளர் என இலங்கை அரசால் வர்ணிக்கப்படும் ரோஹான் குணவர்த்தனா. அவர் தனது ஆய்வில் கண்டறிந்த 'அரும்பெரும் விடயங்களை' கொழும்பில் இடம்பெற்ற ஒரு கலந்துரையாடலில் வெளியிட்டுள்ளார்.

அவரது முதலாவது ஆய்வு முடிவு டக்ளஸ் தேவானந்தா, கருணா, பிள்ளையான் ஆகிய முன்னாள் ஆயுதப் போராளிகளை அரசில் இணைத்திருக்கக் கூடாது என்பதும் அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட வேண்டும் என்பதுமாகும். அது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று தான். ஆனால் அவரின் இனவாதக் கண்களுக்கு அமைச்சர் வீரவன்ச மட்டும் கண்களில் படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவரின் இரண்டாவது கண்டுபிடிப்பு "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எல்லோரும் புலிகள் எனவும் அவர்களை அரசியலில் பிரவேசிக்க விட்டது அரசாங்கத்தின் தவறு" தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் புலிகளால் குறிவைக் கப்பட்டோர் பட்டியலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக் ஷவை விடத் தானே முன்னிலையில் இருந்ததாக ஒரு ஊடகப் பேட்டியில் தெரிவித்திருக்கிறார். அது மட்டுமன்றி விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் எனக் கருதப்பட்ட பலர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இணைக்கப்படவில்லை. அப்படியான ஒரு நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் புலிகளின் மறு உருவமே என்ற கண்டுபிடிப்பு ஒரு அற்புதமான சர்வதேச ஆய்வாளரின் சாதனை தான்.

மூன்றாவதுகண்டுபிடிப்பு "ஜாதிகஹெல உறுமய, பொதுபலசேன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகி யன இனவாதக் கட்சிகள். அவை தடை செய்யப்பட்ட வேண்டும்" என்பதாகும்.

தமிழ் மக்களுக்கு உரிமையை வழங்கக் கூடாது என்பதில் விடாப்பிடியாக நிற்பதுடன் தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறைகளையும் வன்முறைகளையும் மேற்கொண்டு வரும் பொதுபலசேனா போன்ற இனவாதக் கட்சிகளுக்கு நிகராக ரொஹான் குணவர்த்தனா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் நோக்கியுள்ளார். பொதுபலசேன, ஜாதிக ஹெல உறுமய என்பன ஏனைய இனங்களின் உரிமைகளை இல்லாமல் செய்து இலங்கையை ஒரு தனி பௌத்த சிங்கள நாடாக உருவாக்கவும் ஏனைய இனங்களை அடிமைப்படுத்தவும் முன்னின்று செயற்பட்டு வருபவை. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ பறிக்கப்பட்டு வரும் தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக குரல் கொடுத்து வருகிறது. தமிழர்களும் இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு ஏனைய சமூகங்களுடன் சமமாக வாழ வைப்பதை கொள்கையாகக் கொண்டது கூட்டமைப்பு. எனவே கூட்டமைப்பினர் எந்த ஒரு இனத்தின் உரிமைகளுக்கும் எதிராகச் செயற்படுவது கிடையாது.

அப்படியான நிலையில் அடக்குபவர்களையும் அடக்கப்படுவோரையும் ஒரே தராசில் போட்டு இனவாத முத்திரை குத்தியுள்ளார் இந்தச் சர்வதேச ஆய்வாளர். இன அழிப்புக் கொள்கையும் இன அழிப்பிலிருந்து பாதுகாக்கும் கொள்கையும் ஒன்றாகப்படுமளவுக்கு அவரின் ஆய்வின் இலட்சணம் உள்ளது.

அவரின் நான்காவது கண்டுபிடிப்பு "வடபகுதி மக்கள் போர் முடிந்து ஐந்து வருடங்களாகியும் புலிச்சிந்தனையிலி ருந்து விடுபடவில்லை" என்பதாகும்.


ஒன்றுபட்ட இலங்கைக்குள் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஒரு அதிகாரப் பகிர்வைக் கோருதல், நமது பாரம்பரிய குடியிருப்புக் காணிகள் பாதுகாப்பு, அபிவிருத்தி என்ற பேரில் பறிக்கப்படுவதற்கு எதிராகப் போராடுதல் ,புலிகள் மீளுருவாக்கம் பெறுகிறார்கள் எனக் கூறப்பட்டு அப்பாவி மக்கள் கைது செய்யப்படுவதைக் கண்டித்தல், தமிழ்ப் பெண்களும் சிறுமிகளும் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவதை எதிர்த்தல் போன்ற அநீதிகளுக்கு எதிரான நிலைகள் தான் புலிச்சிந்தனை என்றால் தமிழ் மக்கள் என்றுமே அதிலிருந்து விடுபடப்போவதில்லை. அநீதி களுக்கு எதிராகக் குரல் கொடுப்பது மெத்தப்படித்த சர்வதேச ஆய்வாளர்களுக்கு இனவாதமாகவும், புலிச்சிந்தனையாகவும் தெரிந்திருக்கிறது.

ரொஹான் குணரட்னா, சுப்பிரமணிய சுவாமி போன்ற கூலிக்கு மாரடிக்கும் கும்பலை வைத்து உண்மைகளை மறைக்க முயல்கிறது இலங்கை அரசு.

இலங்கையின் போர்க்குற்றங்களையும் ஜனநாயக விரோதப் போக்கையும் மறைத்துப் பிரசாரம் செய்ய லிபேட்டி இன்ரர்நஷனல் என்ற அமெரிக்க நிறுவனத்துக்கு இலட்சக்கணக்கான டொலர்களை இலங்கை அரசு வழங்கியதாக ஒரு தகவல் வெளிவந்துள்ளது. அதை இலங்கை அரச தரப்பு மறுக்கவில்லை. ஏற்கனவே அமெரிக்க ஜனாதிபதியுடன் நெருங்கிப் பழகக் கூடிய ஒருவர் உட்பட பல முகவர்களை இலங்கை தொடர்பான பிரசாரங்களுக்கு குறித்த நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்தன.

அதே வரிசையில் தான் சுப்பிரமணிய சுவாமியும், ரொஹான் குணரத்தினவும் அரசால் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள் போலவே தென்படுகிறது. ஆனால் இவர்கள் சொல்லும் நம்ப முடியாத பொய்க் கருத்துக்களால் சிங்கள மக்களை மட்டுமே ஏமாற்ற முடியுமேயொழிய சர்வதேச அளவில் இலங்கைக்கு மேலும் அபகீர்த்தியே ஏற்படும்.

ஆனால் இலங்கை ஆட்சியாளர்களையும், கூலிக்கு மாரடிப்பவர்கள் பற்றியும் சர்வதேசம் புரிந்து வைத்துள்ளமையால் இவர்களின் வடக்கின் புலிவாசம் போன்ற ஏமாற்றுகள் செல்லுபடியாகப் போவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயியே சரணம்

## பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர் - 27



சீரடி சாயி பாபா. எளிய மனிதராக அவதாரமெடுத்த கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் இன, மொழி, மத பேதங்களற்று வணங்கப்பட்டு வருகிறார். சீரடி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட் பந்த் என்பவர் அவற்றை யெல்லாம் தொகுத்து எழுதிய தொடர்

கேடும், துரதிர்ஷ்டமும் நம்மைத் தாக்கும் போது நாம் அவரை நினைக்கின்றோம். எனவே பீமாஜீ இப்போது கடவுளை நோக்கித் திரும்பி னார். இந்த விஷயத்தில் பாபாவின் பெரும் அடியவரான நானா ஸாஹேப் சாந்தோர்க்கரை கலந்தாலோசிக்க அவருக்குத் தோன்றியது. தனது துன்பமனைத்தையும் கூறி அவருக்கு ஒருகடிதம் எழுதி அவருடைய கருத்தைத் தெரிவித் துக் கேட்டிருந்தார். நானா தமது பதிலில் "ஒரே ஒரு வழி தான் இருக்கிறது. அதாவது பாபாவின் பாதங்களினின்று உதவி பெறுவதேயாகும்" என்று கூறினார். சீரடிக்கு அவர் கொண்டு வரப்பட்டு பாபாவின் முன்னர் வைக்கப்பட்டார். நானாஸாஹேப்பும், சாமா(மாதவ்ராவ் தேச் பாண்டே)வும் அங்கு இருந்தனர். முன்னைய தீய கருமங்களாலேயே இந்த வியாதி என்று பாபா சுட்டிக் காண்பித்து முதலில் இதில்தலையிடத்தீர்மானம் இல்லாதவராக இருந்தார். நோயாளியோ தாம் அநாதரவானவர் என்றும், அவரையே சரணாகதி அடைந்திருப்பதாகவும் அவர் தான் கடைசிக் கதியென்றும் கருணை காட்டும் படியும் கூறி அலறத் தொடங்கினார். அப் போது பாபாவின் உள்ளம் உருகியது. அவர் கூறிய தாவது "பொறு உன்னுடைய கவலை களைத் தூர எறி. உன்னுடைய துன்பங்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டன. ஒருவன் எவ்வ ளவு தான் நசுக்கப்பட்டு வேதனைப் பட்ட வனாக இருப்பினும் இந்த மசூதியில் கால்வைத்தவுடனேயே அவன் மகிழ்ச்சியின் பாதையில் செல்கிறான். இங்கே உள்ள பக்கிரி மிகவும் அன்பானவர். அவர் இந்தவியாதியைக் குணப்படுத்துவார். எல்லோரையும் அன்புடனும், ஆசையுடனும் அவர் பாதுகாப்பார். "ஐந்து நிமிடத்துக்கு ஒரு முறை நோயாளி இரத்த வாந்தி எடுத்துக் கொண்டிருந்தார். ஆனால் பாபாவின் சந்நிதானத் தில் எவ்வித வாந்தியும் இல்லை. நம்பிக்கை யும் கருணையும் கொண்ட மொழிகளை பாபா உதிர்த்த அந்தத்தருணத்திலிருந்தே வியாதி குணமடையும் நிலைக்குத் திரும்பியது. அசௌகர்யமும், சுகாதாரக் குறைவும் உள்ள பீம்பாயின் வீட்டில் தங்கும் படி பாபாவால் கேட்கப்பட்டார். ஆனால் பாபாவின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து அவர் அங்கு தங்கியிருக்கையில் பாபா அவரை இரண்டுகனவுகள்மூலம்குணப்படுத்தினார். முதல் கனவில் ஒரு கல்லை ஒரு பையனாகவும், மராட்டிச் செய்யுள் ஒப்பிக்காததற்காக உபாத்தியாயரின் கடுமையான பிரம்படியை வாங்கிக் கஷ்டப்படுவதைப் போன்றும் கண்டார். இரண்டாவது கனவில் ஒருகல்லையாரோ ஒருவர் தனது நெஞ்சின் மீது மேலும் கீழும் உருட்டிக் கடுமை யான வலியையும், வேதனை உண்டாக் குவதாகக் கண்டார். கனவில் அவர் பட்ட இந்தக்கஷ்டத்துடன் அவரின் சிகிச்சை முடிவடைந்து அவர் வீடு திரும்பினார். பின்னர் அடிக்கடி சீரடி வந்து பாபா தனக்குச் செய்ததை நன்றியுடன் நினைத்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார். பாபாவும் நன்றியுள்ள நினைப்பு மாறாத நம்பிக்கை பக்தி இவற்றைத் தவிர வேறெதையும் எதிர்பார்க்கவில்லை. மகாராஷ்ட்ர மக்கள் பதினைந்து தினங்களுக்கு ஒரு முறை தங்களது இல்லங்களில் ஸத்நாராயண பூஜையை எப்போதும் செய்கிறார்கள். ஆனால் தனது கிராமத்துக்கு திரும்பிய போது பீமாஜி பாடீல் புதிய ஸாயி ஸத்ய விரத பூஜையை, ஸத்யநாராணய பூஜைக்கு பதிலாக இல்லத்தில் ஆரம்பித்தார்.

### பாலா கண்பத் சிம்பி


பாபாவின் மற்றொரு பக்தரான பாலா கண்பத் சிம்பி என்பார். மிகவும் கொடிய விதத்தைச் சேர்ந்த மலேரியாவினால் மிகவும் கஷ்டப்பட்டார். எல்லாவித மருந்துகளையும், கஷாயங்களையும் உபயோகித்தார். பலனேதுமில்லை. ஜுரம் சிறிதளவும் குறைந்தபாடில்லை. அவர் சீரடிக்கு ஓடி பாபாவின் பாதங்களில் வீழ்ந்தார். பாபா அவருக்கு இந்த விஷயத்தில் ஒரு நூதனமான செயல்முறையை அனுசரிக்கச் செய்தார். கொஞ்சம் சாதத்தைத் தயிருடன் கலந்து லக்ஷ்மி கோவிலுக்கு முன்னால் உள்ள கறுப்பு நாய்க்குக் கொடுக்கும் படி கூறினார். பாலாவுக்கு இதை எங்ஙனம் நிறைவேற்றுவதென்பது புதிராக இருந்தது. ஆனால் அவர் வீட்டுக்குப் போனவுடனே தயிரையும், சாதத்தையும் கண்டார். அவை இரண் டையும் கலந்து அந்தக் கலவையை லக்ஷ்மிகோவிலுக்கு அருகில் கொணர்ந் தார். அப்போது ஒரு கறுப்புநாய் வாலையாட்டிக் கொண்டு நிற்பதைக் கண்டார். நாயின் முன்னர் தயிருடன் கலந்த சாதத்தை வைத்தார். நாயும் அதை உண்டது. ஆச்சரியமாக, பாலா கணபதித்ஷிம்பி மலேரியாவிலி ருந்து விடுபட்டார்.

### பாபு ஸாஹேப் புட்டி

புட்டி என்வபர் ஒருமுறை வாந்தியெடுத்தல், வயிற்றுப் போக்கு முதலியவற்றால் அவதியுற்றார். அவருடைய அலுமாரி, மருந்து, மாத்திரைகளால் நிறைந்து இருந்தது. ஆயினும் அவற்றால் ஒரு பயனும் இல்லை. வாந்தியெடுத்து வயிற்றுப் போக்கு ஆனதன் காரணமாக பாபுஸாஹேப் மிகவும் தளர்ச்சி அடைந்தார். எனவே பாபாவின் தரிசனத்துக்காக மசூதிக்குச் செல்லக் கூட அவரால் இயலவில்லை. பாபா அப்போது அவரைக் கூப்பிட்டனுப்பி, அவரைத் தன் முன் உட்காரச் செய்து 'இப்போது கவனி. இனிமேல் நீ வெளியேறக் கூடாது' என்று கூறி, தமது ஆட்காட்டி விரலை ஆட்டி மேலும் 'வாந்தியெடுத்தலும் நிற்க வேண்டும்' எனக் கூறினார். (ஞானத்தை தேடுவோம்)

---

## சொற்சிலம்பம் போட்டி இல. 635



### மேலிருந்து கீழ்

1-பொய், களவு, கள்ளுண்ணுதல், குருநிந்தை, கொலை ஆகிய தவறுகள்.
2-கன்னி.
3-பல ஆண்களுக்கு இது உண்டு.
4-உயிரற்ற உடல்.
5-நீர்மேகம்.
7-முறம்.
9-இலங்கையின் மத்திய பிரதேசத்தை இப்படி அழைப்பர்.
10-பல்கலைக்கழகம் கொடுக்கும் பட்டம்.
13-தாயின் மூத்த சகோதரி.
17-இன்று அல்ல.
18-திக்கு.
20-இது எல்லோருக்கும் பொதுவானது.
22-வாழ்.

### இடமிருந்து வலம்

1-தகுதியான நிலை.
4-தோழன்.
6-சிவன் கையில் உள்ள ஆயுதம்.
7-தீயின் வடிவம்.
8-யுத்தம் நடக்கும் இடம்.
11-கழுத்தில் சூட்டுவது.
12-கரம் கொடுத்தல்.
14-திரவத் தன்மையானது.
15-பிழை அல்ல.
16-இணங்க.
17-விருந்தினர்.
19-இவன் மகாகவி.
21-வைதீக சமயங்களில் ஒன்றைப் பின்பற்றுபவன்.
23-சிறிய பெண்.
24.கர்ப்பம்

அனுப்புபவர் பெயர்:----------------------------------
விலாசம்:----------------------------------------
----------------------------------------------
கையொப்பம்:--------------------------------------

அனுப்ப வேண்டிய முகவரி:
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி இல. 635

■ சொற்சிலம்பம் போட்டி 634ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 10ஆம் திகதி ஆகும்.

■ விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே செப்ரெம்பர் 17ஆம் மற்றும் செப்ரெம்பர் 24ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

■ 1ஆம் பரிசு ரூபா 250 உம் 2ஆம் பரிசு ரூபா 150 உம் 3ஆம் பரிசு ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

### போட்டி இல 633இல் பரிசு பெற்றோர்

1. செல்வச்சந்திரன் சரோஜா, சில்லாலை, வல்வெட்டித்துறை.
2. சிவகுமாரன் சங்கீதா, இலங்கை மின்சார சபை, பூங்கா வீதி, வவுனியா.
3. திருமதி ம.வளர்மதி, 3 ஆம் வட்டாரம், முள்ளியவளை

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00மணி வரை தமக்குரிய பணப்பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்திலும், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி, கொழும்பு, வவுனியா ஆகிய இடங்களில் உள்ள உதயன்-சுடரொளி பிராந்திய அலுவலகங்களிலும் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### பாராட்டுப் பெறுவோர்

**டர்சிகா நாகராசா,** பட்டினசபை வீதி, சங்கானை.

**ச.அன்ரனி,** புதுக்குளம், கனகராயன் குளம் தெற்கு, புதுக்குளம்

**பா.வசந்தன்,** போக்காலை லேன், உடுப்பிட்டி.

**க.குணபாலன்,** அளவெட்டி கிழக்கு, அளவெட்டி.

**இ.லூர்த்துநாயகி,** இல;-85/4 கார்மல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி 633இன் விடைகள்

**மேலிருந்து கீழ்**
1.விபத்து
2.ருசி
3.துவாரம்
4.நம்
5.சுத்திரி
8.தடி
9.கபடு
10.விளம்பரம்
12.வீதம்
13.கல
15.பாடம்
16.சாக்கு
17.வயல்
19.திம்பு
20.சுப
21.வசி

**இடமிருந்து வலம்**
1. விருந்து
4. நல்க
6.பசி
7.வாதம்
9.கரடி
10.விதி
11.துவீபம்
13.களரி
14.தடு
15.பாலம்
16.சாம்
17.வட
18.பதி
20.சுயம்வரம்
22.கும்பல்
23.சிம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீபாவளிப் பந்தயத்தில்...




சக நடிகர்களுடன் போட்டிபோட்டு ஜெயிக்க வேண்டும் என்ற மனோபாவம் இன்றையநடிகர்களிடம் குறைந்துவிட்டது. அதனால்தான் யாருடைய படமும் வெளிவராத நாளாகப் பார்த்து அந்த நாளில் தம்முடைய படத்தை வெளியிட ஆர்வம் காட்டுகிறார்கள். அப்படித் தனியாகக் களத்தில் குதித்தால்தான் தன் படம் ஓரளவுக்கு வசூலைக் குவிக்கும் என்று கணக்குப்போட்டு செயற்பட்டு வருகின்றனர். இப்படிப்பட்ட சூழலில் தெரிந்தோ தெரியாமலோ தீபாவளி அன்று மற்ற படங்களுடன் போட்டிபோட்டு வெற்றிபெற வேண்டிய நிலை உருவாகி உள்ளது. ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய், சமந்தா நடிக்கும் கத்தி, விஷால் நடிப்பில் ஹரி இயக்கும் பூஜை ஆகிய படங்களுடன் தனுஷின் அனேகன் படமும் தீபாவளி பந்தயத்தில் குதிக்கவிருக்கிறதாம்.

கே.வி.ஆனந்த் இயக்கி வரும் 'அனேகன்' படத்தின் படப்பிடிப்பு இறுதிகட்டத்தை அடைந்துள்ளது. தனுஷ், அமீரா தஸ்தர் சம்பந்தப்பட்ட ஒரு பாடல் மட்டுமே எடுக்க வேண்டி உள்ளதாம். இந்தப் பாடலை அடுத்த மாதம் முதல் வாரத்தில் சென்னையில் படமாக்க திட்டமிட்டுள்ளாராம் கே.வி.ஆனந்த். இத்துடன் அனேகன் படத்தின் மொத்த படப்பிடிப்பும் முடிவடைந்து விடுமாம்.

தனுஷின் 'வேலையில்லா பட்டதாரி' மிகப்பெரிய வெற்றியடைந்துள்ள நிலையில், தனுஷின் அடுத்த படமாக வரவிருக்கும் அனேகன் பெரும் எதிர்பார்ப்பில் இருந்து வருகிறது.

விஜய்யின் கத்தி, விஷாலின் பூஜை படங்களுடன் தனுஷின் அனேகன் படமும் தீபாவளியன்று மோதவிருப்பதால் ரசிகர்களின் எதிர்பார்ப்பு இருமடங்காகி உள்ளது. இந்தப் படங்களுடன் கமல் நடிக்கும் உத்தமவில்லன், சிவகார்த்திகேயன் நடிக்கும் டாணா ஆகிய படங்களும் கூட தீபாவளிக்கு வரவிருக்கும் படங்களின் பட்டியலில் உள்ளன.



# கமலோடு கலாபவன்மணி

மம்முட்டி, ரஞ்சித் நடித்த 'மறுமலர்ச்சி' படத்தில் சிறு கதாபாத்திரத்தில
கலாபவன்மணி. அதன் பின் விக்ரம் நடித்த 'ஜெமினி' படத்தில் நகைச்சுவை
வில்லனாக நடித்து நல்ல பெயரைப் பெற்றதைத் தொடர்ந்து பல படங்களி
ஆரம்பித்தார். சமீபகாலமாக அதிகமான தமிழ்ப் படங்களில் நடிக்காமல்
கலாபவன் மணி தற்போது கமல்ஹாசன் நடிக்கும் 'த்ரிஷ்யம்' படத்தின் த
பொலிஸ் கதாபாத்திரம் ஒன்றில் நடிக்க உள்ளார்.


கமல்ஹாசன் நடிக்கும் படம் ஒன்றில் கலாபவன் மணி நடிப்பது இதுவே
முறை.

# இறுதிக்கட்டத்தில் பூஜை

படத்தின் பூஜை அன்றே படத்தின் வெளியீட்டுத் திகதியைத் தீர்மானித்து அறிவித்துவிடுமளவுக்கு பக்கவாக திட்டமிட்டு வேலை செய்கிறவர் இயக்குநர் ஹரி. விஷாலை வைத்து ஹரி தற்போது இயக்கி வரும் பூஜை படத்தை ஆரம்பித்தபோதும் கூட தீபாவளி வெளியீடு என்ற அறிவிப்போடுதான் தொடங்கினார்.

தாமிரபரணி படத்துக்குப் பிறகு விஷாலும், இயக்குநர் ஹரியும் மீண்டும் இணைந்துள்ள இந்தப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடையும் கட்டத்தில் இருக்கிறது.

பூஜை படத்தில் விஷாலுடன் முதன் முதலாக ஜோடி சேர்ந்து நடித்து வருகிறார் ஸ்ருதிஹாசன். பாடல் காட்சிகளில் தான் சரிகாவின் மகள் என்பதை நிரூபித்திருக்கிறாராம். பூஜை படத்துக்கு இசை யுவன் சங்கர் ராஜா. கடந்த வருட தீபாவளி அன்று விஷாலின் பாண்டிய நாடு படம் வெளியாகி ரசிகர்களுக்கு விருந்து படைத்தது. இந்த வருட தீபாவளி விருந்தாக பூஜை படம் இருக்குமா?



# இரும்புக் கு...
# பாயத் தயா...

அதர்வா, பிரியா ...ந்த் ந...
குதிரை' படத்தில் இந்தியாவின் மு...
மோட்டார்சைக்கிள் பந்தய வீராங்...
சம்பியனுமான அலிஷா அப்துல்லா...
ல் நடித்திருக்கிறார். இந்தப் படத்...
இத்தாலியில் எடுக்கப்பட்ட காட்சி...
வரை உள்ள மோட்டார் சைக்கிள்க...
எடுத்துக்கொண்டு ஓட்டி இருக்கிற...
விரைவில் வெளியாகவுள்ள இரு...
வசூல் பந்தயத்திலும் வெல்லுமா?
ரசிகர்களின் எதிர்பார்ப்பு.



# கோபத்தில் குஷ்பு

சுந்தர்.சி இயக்கி வரும் அரண்மனை படத்தின் படப்பிடிப்புகள் முடிந்து தற்போது 'கிரபிக்ஸ்' பணிகள் நடந்து வருகின்றன. இந்த நிலையில் முழுமைபெறாத, தயாரிப்பில் இருந்த படத்தின் முன்னோட்டம் இணையத் தளங்களில் வெளிவந்துள்ளது. இதில் ஒலியமைப்பு சரியில்லை,வர்ணக்கலவை எதுவும் செய்யலில்லை.

இதைப் பார்த்த குஷ்பு அதிர்ச்சி அடைந்து கணவர் சுந்தர்.சிக்கும் தயாரிப்பாளர் கார்திக் தினேசுக்கும் போன் செய்து கேட்டார். அவர்கள் தங்களுக்கு இது குறித்து எதுவும் தெரியவில்லை என்றிருக்கிறார்கள்.

" படத்தின் விளம்பரப் பிரிவில் இருக்கும் யாரோதான் இதைச் செய்திருக்கிறார்கள். என் கணவரின் மதிப்பைக் கெடுக்க யாரோ திட்டமிட்டு இதனைச் செய்திருக்கிறார்கள். சுந்தர் இரவும் பகலும் வேலை பார்த்து படத்தை செதுக்கி வருகிறார். ஒரு சிலர் அதனை இப்படிக் கெடுத்து வருகிறார்கள்" என்று தன் கோபத்தை வெளிப்படுத்தி இருக்கிறார் குஷ்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்குநர் சரண், தான் தயாரித்து இயக்கும் 'ஆயிரத்தில் இருவர் படத்தில் மூன்று கதாநாயகிகளை அறிமுகப்படுத்துகிறார்.


தெலுங்குப் படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் சாக்ஷி சவுத்ரி என்ற பெண்ணுக்கு சாமுத்ரிகா என்றும், கன்னடப் படங்களில் நடிக்கும் சுரபி என்ற நடிகைக்கு ஸ்வஸ்திகா என்றும் பெயர் வைத்திருக்கிறார்.

கேஷா கம்பெட்டி என்பவரின் பெயரை மட்டும் மாற்றாமல் அப்படியே நடிக்கவைத்துவிட்டார். அவர் படத்தில் காட்டிய கவர்ச்சி மழையில் இயக்குநர் பெயரை மாற்ற மறந்து விட்டார் போலும்.



## பெயர் மாறவில்லை

## லிங்காவில் சுதீப்



கே.எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் ரஜினிகாந்த், அனுஷ்கா, சோனாக்ஷி சின்ஹா மற்றும் பலர் நடிக்க பரபரப்பாக உருவாகி வரும் படம் 'லிங்கா'. ரஜினிகாந்த் நடித்து இதற்கு முன் வெளிவந்த 'கோச்சடையான்' படம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியைப் பெறாததால், அதை முன்னமே தெரிந்தோ என்னமோ ரஜினிகாந்த் 'லிங்கா' படத்தில் நடிக்க முடிவெடுத்தார். 'கோச்சடையான்' வெளியீட்டுக்கு முன்னதாகவே 'லிங்கா' படத்தின் படப்பிடிப்பு மைசூரில் ஆரம்பமாகி தொடர்ந்து ஹைதராபாத்தில் சில மாதங்களாக நடைபெற்றது. தற்போது கர்நாடகாவில் மீண்டும் நடைபெற்று வருகிறது.

படத்தில் பிரதான வில்லனாக தெலுங்கு நடிகரான ஜெகபதி பாபு நடிக்கிறார். இவர் இதற்கு முன் 'தாண்டவம்' படத்தில் வில்லனாக நடித்தவர்.

தற்போது இறுதி காட்சியில் வரும் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் "நான் ஈ" புகழ் சுதீப் நடிக்கப் போகிறாராம். சில நிமிடங்களே வரும் காட்சிதான் என்றாலும் அந்தக் காட்சியில் நடிப்பது ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக இருக்குமென்பதால் ஒரு முன்னணி நடிகர் நடித்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்தார்களாம். அதனால்தான் அதில் சுதீப்பை நடிக்க வைக்கப் போவதாக செய்திகள்

## மணி

பாத்திரத்தில நடித்தவர்
ல் நகைச்சுவை கலந்த
பல படங்களில் நடிக்க
நடிக்காமல் இருந்த
ம்' படத்தின் தமிழ்பதிப்பில்

ப்பது இதுவே முதல்

## புக் குதிரை தயார்

ந்த ந கும் "இரும்புக்"
தியாவின் முதல்
ந்தய வீராங்கனையும்
ா அப்துல்லா ஒரு பாத்திரத்தி
இந்தப் படத்துக்காக
ப்பட்ட காட்சிகளில் எட்டு கியர்
ர் சைக்கிள்களை , பயிற்சி
ட்டி இருக்கிறார் அதர்வா.
கவுள்ள இரும்புக் குதிரை
வெல்லுமா? என்பதே
ர்ப்பு.



## சித்தார்த் விதி விலக்கு

'அஞ்சான்' படத்தைப் பற்றிய புதிய செய்தி ஒன்று இணைய உலகில் வலம் வந்து கொண்டிருக்கிறது. அதாவது அஞ்சான் படத்தில் சூர்யாவைவிட வித்யுத்துக்கு அதிக முக்கியத்துவம் இருப்பதாக எண்ணி அவரது காட்சிகளைக் குறைக்க எண்ணியுள்ளனராம். இந்தச் செய்தி உண்மையோ பொய்யோ.. இதற்கு மாறான மனோபாவம் கொண்ட நடிகராக இருக்கிறார் சித்தார்த்.

சமீபத்தில் வெளிவந்து வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'ஜிகர்தண்டா' படத்திலும் நாயகன் சித்தார்த்தைவிட, வில்லன் வேடத்தில் நடித்திருந்த பாபி சிம்ஹாவுக்கே அதிக பெயர் கிடைத்தது.

சிம்ஹாவுக்கு இப்படிப் பெயர் கிடைக்கும் என்பதை 'ஜிகர்தண்டா' கதையைக் கேட்கும்போதே சொன்னாராம் சித்தார்த். அதே போன்று தற்போது சித்தார்த் நடித்து வரும் காவியத்தலைவன் படத்தில் அவருடன் பிரித்விராஜும் இணைந்து நடித்திருக்கிறார்.

1930களில் நடப்பதுபோல் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கதைக்களத்தில் கூத்துக்கலையின் பெருமையும், மேடை நாடகக் கலைஞர்களின் வாழ்க்கை முறையையும் படமாக்கியிருக் கிறாராம் இயக்குநர் வசந்தபாலன்.

இந்தப்படத்தில் சித்தார்த், பிரித்விராஜ் இருவருக்குமே சவாலான சமமான வேடங்கள். என்றாலும், தான் ஏற்று நடித்திருக்கும் வேடத்தி ல் வேறு யாரும் நடிக்க முடியாத அளவுக்கு சிறப்பாக நடித்துள்ளாராம் பிரித்விராஜ். படப்பிடிப்பின்போதே இதை நேரில் கண்ட சித்தார்த், காவியத்தலைவன் படம் வெளிவந்த பிறகு தன்னைவிட பிரித்விராஜுக்கே அதிக பெயர் கிடைக்கும் என்று இப்போதே சொல்லத் தொடங்கிவிட்டார். போட்டியும் பொறாமையும் கொண்ட திரையுலகில் சித்தார்த் போன்ற விதிவிலக்கானவர்களும் இருக்கத் தான் செய்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திரப் பானை 1




மலை அடிவாரத்தில் அந்தச் சிறுவனின் வீடு இருந்தது. அவனுக்கு அப்பா இல்லை. அவர் இருந்தபோது நிறையச் சொத்துக்கள் இருந்தன. அந்தச் சொத்துக்களை, மலை உச்சியில் இருந்த ஒரு பணக்காரன் ஏமாற்றி எடுத்துக்கொண்டான். இப்போது, அவர்களிடம் இருப்பது, ஒரு பசு மட்டுமே. அம்மாவும் மகனும் சாப்பாட்டுக்கே மிகவும் சிரமப்பட்டனர்.

மகனை அழைத்த அம்மா,"இந்தப் பசுவைப் பக்கத்தில் உள்ள நகரத்தில் விற்றுவிட்டு வா"என்று அனுப்பினார்.

மாட்டின் கழுத்தில் கயிற்றைக் கட்டிக்கொண்டு சிறுவனும் கிளம்பினான். வழியில் ஒருவரைச் சந்தித்தான். அவர் துணியால் மூடிய ஒரு பொருளை வைத்திருந்தார். சிறுவனைப் பார்த்து,

"எங்கே போகிறாய்?" என்று கேட்டார்.

"இந்தப் பசுவை விற்பதற்காகச் சந்தைக்குப் போகிறேன்" என்றான்.

"அப்படியா... அந்தப் பசுவை எனக்கு விற்கிறாயா?" என்று கேட்டார்.

"நீங்கள் எவ்வளவு தருவீர்கள்?" என்றான்.

"இந்தப் பானையை உனக்குத் தருகிறேன்" என்றார்.

"பசுவுக்குப் பதிலாக பானையா? நான் தர மாட்டேன்" என்றான் சிறுவன்.

அப்போது, மெல்லிய ஒரு குரல் "என்னை வாங்கிக் கொள், என்னை வாங்கிக்கொள்" என்று பானையில் இருந்து வந்தது.

(தொடரும்)

## வாழ்த்துகள் மெட்வின் தேவா!

கால்களில் சக்கரம் கட்டிக் கொண்டு ஓடும் விளையாட்டுக்குப் பெயர் ஸ்கேட்டிங். அதில் தாழ்வான உயரத்தில் படுத்த மாதிரி ஸ்கேட்டிங் செய்வதுதான் லிம்போ ஸ்கேட்டிங். இதில் நிலத்தில் இருந்து 9 அங்குலம் தாழ்வான உயரத்தில் 45 மீற்றர் தூரத்தைக் கடந்து புதிய கின்னஸ் சாதனையைப் புரிந்துள்ளார் சென்னையைச் சேர்ந்த 10 வயதுச் சிறுவன் மெட்வின் தேவா.


இதற்கு முன்பு கர்நாடகாவைச் சேர்ந்த ரோஹன் கோக்னே என்ற 12 வயது சிறுவன் 10 அங்குலம் தாழ்வான உயரத்தில் 10 மீற்றர் கடந்ததே சாதனையாக இருந்தது. இப்போது அதை மெட்வின்




தேவா முறியடித்துள்ளார். இளம் கன்று பயமறியாது என்று சொல்வதைப் போல, 100 மீற்றர் தூரத்தைக் கடந்து சாதனை புரிய ஆர்வமாக இருப்பதாகக் கூறுகிறார் இந்தக் குட்டி கின்னஸ் சாதனையாளர்.

## சிறுவர்களே...!

வர்ணங்களால் மெருகூட்டுங்கள்.



## சின்னச் சின்ன உண்டியல்



சின்னச் சின்ன உண்டியல்
சிவப்பு நிறம் எனது உண்டியல்
மண்ணில் செய்த உண்டியல்
மகிழ்ச்சி கொடுக்கும் உண்டியல்!

எண்ணி எண்ணி அதனிலே
எனக்குக் கிடைக்கும் காசுகள்
சிறுகச் சிறுக நானுமே
சேர்த்து வருதல் தெரியுமா?

காசு பணமும் சேர்வதால்
கவலை இல்லை எனக்குமே
ஆசைப்பட்ட பொருள்களை
அதனைக் கொண்டு
வாங்குவேன்!

எழுதும் பொருட்கள்
வாங்குவேன்
இனிப்பு மிட்டாய் வாங்குவேன்
யாரும் உதவி வேண்டினால்
எடுத்துத் தந்து உதவுவேன்!


சின்னஞ் சிறிய வயதிலே
சேர்க்கும் பண்பு தேவையே
சேர்த்த பணத்தைக் கொண்டு
நாம்
சேவை செய்ய வேண்டுமே!

– சிறுவர் மணி

## கண்டு பிடியுங்கள்

இரு படங்களுக்கு மிடையே 4 வித்தியாசங்கள் உள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணர்வின் ஊற்று -10



## நீசர்கள்

பாவை உன் முடியில்
பலர் வாழ்வு முடிவில்
வஞ்சகரின் வலைக்குள்-நீ
வகைப்பட்டுப் போனதால்
நல்லதைச் செய்யாமல்
நாசகாரச் செயலைச் செய்யும்
நீசர்களின் செயலால்
பிறர் மனையிலும் கேடு
மனத்திலும் கேடு

அபர்ந்தினி,
மிருசுவில்

## தனிமை

உடலாலும் உள்ளத்தாலும்
நீயும் நானும் வேறு
உணர்வாலும் உள்ளத்தாலும்
நானும் நீயும் ஒன்று
ஏனெனில் இருவருமே,
தனிமை எனும் சிறையில்
தலை துண்டிக்கப்பட்டு
தனித்து விடப்பட்ட
அநாதைகளாக....

வி. அஜந்தன்,
வவுனியா

## சாட்சி

காமுகர் வேட்டையில்
என் பாலகி
கிழித்து புதைக்கப்பட்ட போது
நானும் கூடவே
கழுத்தறுக்கப்பட்டவளாய்...!
வீசப்பட்டாலும்
நான்-உக்கிப் போகாத
உண்மையின் சாட்சி


பருத்திதாசன்

## வேண்டாமே தற்கொலை

இணைசேரா தண்டவாளங்கள்
தடம் புரளும் ரயில் வண்டிகள்
தண்டவாளம் மேல் தலை வைத்து
தற்கொலை செய்யும் மூடர்களே
பிரிவுகள் துயரங்கள் யாவும்
நமக்குப் புதிதல்ல அதற்காக
இரும்பின் மேல் தலைவைத்து
தற்கொலை செய்வது முட்டாள்த்தனம்
வெள்ளைக்காரன் கொடுத்தது நமக்கு
பிரயாண வழிக்காக நம் உயிரை
அதில் மாய்ப்பதற்காக அல்ல

கே. அகிலன் ,
கனகாம்பிகைக்குளம்

# கவிதைப்புனல்



## மனக்கவிதை

காற்றிலே வரும்
கனவுகளை
கொத்தாகத் தூக்கி
என் மனதுக்குள்
பலமுறை
எடுத்து செருக்கிக்
கொள்ளுவேன்

அலையும் மனதில்
அமர்ந்து
அடம்பிடிக்கும்
வெளியே
பறப்பதற்காக
என்னை மீறி
பல முறை அவை
வானத்தில் பறந்து
கைகாட்டும்
கண் சிமிட்டும்
அதனால் தான்
என்னவோ
கவிதைகள்
என் மனதில்
வட்டமடிக்கின்றன

முல்லைரமணன்



## துரோகிகள்

எதிரிகளை விடவும்
கொடியவர்கள்
துரோகிகள்
ஏனென்றால்
நண்பர்களாக
இருந்தே
நயவஞ்சகம்
புரிந்து
காட்டிக் கொடுக்கின்ற
கயவர்கள்!

கவிக்குயிலன்,
சேனையூர்

## தேவை

மனித நேயம்! எங்கே
மாயமாகிப் போனாய்?
நீ மண்ணில் மறைந்தாயா?
நீரில் கரைந்தாயா? இல்லை
நெருப்பில் தீர்ந்தாயா?
இன்றைய உலகில்
இன்றியமையா தேவையே
நீ இடம் மாறி எங்கிருந்தாலும்
மனித இனம் புற்களாகி
காய்ந்து கருகு முன், பூக்களாக
எம் பூமியில் மலர்ந்து விடு!

கல்லொளுவை பாரிஸ்.
மல்வானை

## அவளது காதல்

அழகான அவள் முகத்தை
அன்று நான் பார்த்தேன்
தூங்க மறுத்தேன்
புரண்டு படுத்தேன்
காதல் எனும் அன்பில்
நான் உறைந்தேன்
ஒவ்வொரு நொடியும்
அவளை நினைத்தேன்
அவள் கன்னத்தில்
நான் இட்ட முத்தத்தை
பல தடவை துடைத்திருப்பாள்
ஆனால் என் காதல்
பொய் என்று பாதியிலே
விட்டு விட்டாள்
காதல் என்பது பொய் இல்லை
என்பது அவளுக்குத் தெரியாது
ஏனெனில் அவளிடம்தான் காதல்
இல்லையே
நீ வேண்டும் எனக்காக அல்ல
என் உண்மைக்காதலுக்காக

சி. அகிலன்.
கனகாம்பிகைக்குளம்



## விலை மாது

அப்பனில்லாத - என்
குழந்தையின் அலறல் கேட்டு
சிலர் சோறு தந்தார்கள்
மானம் மறைக்க
உடு புடவைகள்
தந்தார்கள்
இன்னும் சிலர்
நிறையப் பணப்பரிசில்கள்
தந்தார்கள் -நானும்
குழந்தையும் கேட்காமலே
எல்லாம் அதிகமாகத்
தந்தார்கள்
என் முந்தானையை
ஒவ்வொரு தடவையும்
முகர்ந்த படியே
அத்தனையும் தந்தார்கள்

சாம்-ரமேஸ்குமார்.
மருதனார்மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பானை வயிற்றோரைப் பாதுகாத்தல்

டொக்டர்.எம்.கே.முருகானந்தன்.
MBBS(Cey), DFM (Col), FCGP (col)
குடும்ப மருத்துவர்



"பானை வயிற்றோனே பக்தர்களைக் காப்போனே" என யானை முகத்தானைப் பக்தர்கள் துதித்து மகிழ்வது வழக்கம்.

ஆனால் பானை வயிறுள்ளவர்கள் மற்றவர்களைக் காப்பது முடியாது என்பது மட்டுமல்ல தம்மையும் காப்பது கடினம் என நவீன மருத்துவம் கூறுகிறது.

**பானை வயிறு என்றால் என்ன?**

எமது உடலில் கொழுப்பு உள்ளது. உடலின் எடை அதிகரிப்புக்கு இந்தக் கொழுப்பு மிக முக்கிய காரணமாகிறது. எடை அதிகரிப்புக்கு முக்கிய காரணமான கொழுப்பானது எமது சருமத்தின் கீழ் இருக்கிறது.

அதே போல எமது வயிற்றறையிலும் இருக்கிறது. வயிற்றறையில் இருக்கும் கொழுப்பு, தசைகளுக்கும் கீழே உள்ளுறுப்புகளுடன் சேர்ந்திருக்கும் போதே வயிறு அதிகம் பருமனாகிறது. தொந்தி விழுகிறது. ஆபத்து மிக அதிகமாகிறது.

**அதீத எடை ஆபத்தானது**

அதீத எடையின் ஆபத்துக்கள் பலவாகும்.

அதீத எடையானது பல ஆபத்தான நோய்களுக்குக் காரணமாகிறது என்பதை அறிவீர்கள்.

அதீத எடை என்பது உடற் திணிவுக் குறியீடு (BMI-30) 30ற்கு மேல் என மதிப்பிடுகிறார்கள்.

பணச் செழிப்பும் உணவு அதிகம் நிறைந்ததுமான அமெரிக்காவில் மட்டும் 72 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் அவ்வாறான அதீத எடை கொண்டவர்களாகும்.

1. நீரிழிவு
2. குருதியில் அதிகரித்த கொலஸ்டரோல் அளவு
3. உயர் இரத்த அழுத்தம்
4. ஆஸ்த்மா
5. முழங்கால் தேய்வு உட்பட்ட மூட்டு நோய்கள்
6. தூக்கத்தில் மூச்சுத் திணறல்

போன்ற பல நோய்களுக்கு அடிப்படைக் காரணமாகிறது. எனவே தான் எடையைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

**ஒரே ஒரு நன்மையா?**

பாதிப்புகள் பல இருந்தபோதும் ஒரே ஒரு நன்மை அவதானிக்கப்பட்டுள்ளது. அதுவும் பெண்களில் மட்டும். அதிக எடையுள்ள பெண்கள் மெலிந்த பெண்களைவிட குறைந்தளவே எலும்புத் தேய்வுக்கு ஆளாவதாக அறியப்படுள்ளது.

இருந்த போதும் இது பற்றி இப்பொழுது மேலும் நுணுக்கமான ஆய்வுகள் செய்யப்பட்டுள் ளன. அதீத எடை கொண்ட பெண்களில் கொழுப்பானது வயிற்ற றையில் இருந்தால் அவர்களது எலும்புகளின் அடர்த்தி குறைவாக இருப்பதுடன் எலும்பிலும் கொழுப்பு அதிகம் இருப்பது கண்டறியப்பட்டது.

இது காலகதியில் இடுப்பு எலும்பு முறிவு, முள்ளதண்டு எலும்புகளில் உடைவு ஆகியவற்றைக் கொண்டு வரும்.

அதாவது கொழுப்பு சருமத்தின் கீழ் இருப்பதை விட வயிற்றறையில் இருந்தால் பாதிப்பு அதிகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**ஒஸ்டியொபொரோசிஸ்**

அமெரிக்காவில் மட்டும் 10 மில்லியன் மக்கள் எலும்பு அடர்த்தி குறைந்த ஒஸ்டியொபொரோசிஸ் (Osteoporosis) நோயினால் துன்பப்படுகிறார்கள். மேலும் 10 மில்லியன் மக்களின் எலும்புகள் நலிவுற்று அந்தநோய் வருவதற்கான ஆரம்ப நிலையில் இருக்கிறார்கள்.


எமது நாட்டிலும் இந்த நோயினால் பலர் இடுப்பு எலும்பு முறிந்து சிரமப்படுகிறார்கள்.

இதற்கான சத்திர சிகிச்சைகள் இருந்தபோதும் அது செலவானதும் சிரமமானதும் ஆகும். முள்ளந்தண்டு எலும்பு உடைவு மற்றும் சிதைவு காரணமாக முதுகுவலி, கால்வலி, குனிந்து வேலை செய்ய முடியாமை எனப் பல தொல்லைகளுக்கு ஆளாவோர் எண்ணிக்கை பற்றிய தரவுகள் இங்கு கிடையாது. ஆனால் இதில் பெரும்பாலானோர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**வயிற்றறைக் கொழுப்பின் ஏனைய பாதிப்புகள்**

வயிற்றறைக் கொழுப்பு அதாவது தொந்தி வண்டியானது எலும்புப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் இருதய நோய்கள், நீரிழிவு ஆகியன ஏற்படுவதற்கும் மிக முக்கிய காரணங்களாகும்.

அதனால்தான் பல மருத்துவர்கள் பிரஸர், கொலஸ்டரோல், நீரிழிவு, எடை ஆகியவற்றை அளவிடுவதுடன் வயிற்றின் சுற்றளவையும் அளந்து பார்க்கிறார்கள்.



**அளந்து பாருங்கள்**

உங்கள் வயிற்றில் கொழுப்பு அதிகமிருப்பதை அறிவது எப்படி? வயிற்றின் சுற்றளவை அளந்து பார்ப்பதுதான் ஒரே வழி.

நாங்கள் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். எங்களுக்கு இருக்க வேண்டிய அளவுகளாவன

ஆண்களுக்கு 90 செ.மீ அல்லது 35.4 அங்குலங்கள் குறைவாக

பெண்களுக்கு 80 செ.மீ அல்லது 31.5 அங்குலங்கள் குறைவாக

இதற்கு மேல் அதிகரிக்க விடாதீர்கள்.

**வயிற்றறைக் கொழுப்புக்குக் காரணங்கள்**

வயிற்றில் கொழுப்பு அதிகரிப்பதற்குக் காரணங்கள் என்ன? பொதுவான எடை அதிகரிப்புக்குக் காரணமான அதே தவறான உணவுமுறைகளும், போதிய உடற் பயிற்சி இல்லாததுமே ஆகும். ஆனால் அத்துடன் பரம்பரைக் காரணங்களும் உள்ளன. இயற்கை யாகவே மேலை நாட்டவர்களை விட ஆசிய நாட்டவர்களுக்கு வயிறு வைப்பது அதிகம்.

**முயற்சி செய்யுங்கள்**

ஆரோக்கியமான உணவுமுறைகளுடன் தினசரி உடல் உழைப்பு அல்லது பயிற்சி மூலம் உங்கள் எடையையும் முக்கியமாக வயிற்றில் கொழுப்பையும் குறைத்து உடல் நலத்தை அக்கறையுடன் பேணவேண்டும்.

**இரத்தத்தில் கொழுப்பு**

இரத்தத்தில் கொழுப்பு என்பது முற்றிலும் வேறு விடயம். அது கொலஸ்டரோல் பற்றியது. அதீத எடையுள்ளவர்களுக்கு அது வருவதற்கான வாய்ப்பு அதிகமாயினும் மெலிந்த எடை உடையவர்களுக்கு வராது என்று சொல்ல முடியாது.



## உணர்வின் ஊற்று - 12

வாசகர்களே! நீங்கள் கவிதை எழுத விரும்பு பவர்களா? அப்படியா யின் உங்களுடைய கவி யாற்றலுக்கு ஒரு சவால். இந்தப் பகுதியில் பிரசுரமாகியிருக்கும் ஒளி ஓவியத்தை பார்க்கும்போது உங்கள்மனதில் எழும் உணர்வுகளை 10 வரிக்குள் கவிதையாக்கி அனுப்புங்கள்.

**அனுப்பவேண்டிய முடிவுத் திகதி : 16.09.2014** தரமானவை பிரசுரிக்கப்படும்.

முகவரி :

**உணர்வின் ஊற்று - 12**
**சுடர் ஒளி**
*361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரைதேடும் இணைய வலை

தூண்டில் -15


■ சுடுதண்ணி

சட்டங்களை நிறைவேற்றும் நாடாளுமன்றில் வாக்களிக்கும் அரசியல்வியாதிகளின் இணையம் குறித்த விழிப்புணர்ச்சி பற்றி சொல்லவே தேவையில்லை. அதற்கு அருமையான, கிளுகிளுப்பான உதாரணம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் காங்கிரஸ் உறுப்பினர் அன்ரனி வெய்னர் (Anthony Weiner). இளம் வயது கவர்ச்சித் தோற்றம். அரசியலில் அசுர வளர்ச்சி என்று நியூயோர்க் மாநகரத்தில் உள்ள அனைத்து சொப்பன சுந்தரிகளினதும் கனவுக் கண்ணன். அண்ணனும் கிடைத்த வாய்ப்புகளிலெல்லாம் கோலடிக்கும் திறன்மிக்க உதைபந்து வீரரைப்போல எழில்மிகு பாவையர்களை வாசிப்பதில் கில்லாடி. இப்படி மைனர் குஞ்சாக வலம் வந்து கொண்டிருந்த அன்ரனியின் மனதில் ஆழமாகக் கொக்கியைப் போட்டு மோதிரம் மாட்டியவர் இந்தியா-பாகிஸ்தானின் கூட்டுத்தயாரிப்பான ஹூமா (Huma Abedin). இவர் ஹிலாரி கிளிண்டனின் முக்கிய உதவியாளர் என்பதும் பில் கிளிண்டன் தலைமையில் திருமணம் நடந்தேறியதும் குறிப்பிடத்தக்கது. மணமானாலும், ஆடிய காலும், பாடிய வாயும் வேண்டுமானால் சும்மா இருக்கலாம், அன்ரனியால் முடியவில்லை. ஒரே நேரத்தில் பல இடங்களில் பல தளங்களில் களமாடிக்கொண்டிருந்த அன்ரனிக்கு விதி இணையத்தில் வீதி உலா வந்தது.

தனிமையில் இனிமை காணும பொருட்டு அன்ரனி சில கிளுகிளுப்பான படங்களை ஒரு கிளியிடம் யதார்த்தமாக டுவிட்டரில் பகிரப்போக, ஒரு சிறிய தவறால் அது அந்தக் கிளிக்கு மட்டும் செல்லாமல் அன்ரனியை டுவிட்டரில் தொடரும் அத்தனை பேருக்கும் பதார்த்தமாக பல்லைக்காட்டியது. போதை இறங்கிய அடுத்த சில நிமிடங்களில் தவறை உணர்ந்த அன்ரனி படங்களை டுவிட்டரில் இருந்து நீக்கி விட்டு, போர்வையை இறுக்கிப் போர்த்திக் கொண்டு தூங்கி விட்டார். அந்த சில நிமிட இடைவெளியில் இணையத்தில் அந்த புகைப்படப்பதிவுகளை நகலெடுத்த ஒருவர் நல்லெண்ண அடிப்படையில் ஊடக நிறுவனம் ஒன்றுக்கு அனுப்பி வைத்து, அவர்களின் இணையத்தளத்தில் சுடச்சுட வெளிவந்தும் விட்டது.

அந்த புகைப்படத்தை பார்த்து அத்தனை பேருக்கும், குளிர்க் காய்ச்சலே வந்து விட்டது. மறு நாள் அன்ரனி எங்கும் நடமாட முடியவில்லை. எங்கு போனாலும் ஒரே கேள்வி '"அது உங்களுடைய புகைப்படமா?" என்று அனைத்து தொலைக்காட்சிகளும் ஊரிலுள்ள கருத்துக்கந்தசாமிகளனைவரையும் ஒரு அரைவட்ட மேஜையில் அமரவைத்து அந்தப்படத்தினை உற்று, உற்றுப் பார்த்து உருக்குலைந்து போனார்கள். அவரின் உள்ளாடை எந்த நிறுவனத்தின் தயாரிப்பு, அளவு என்ன, அன்ரனி அதனை எந்தக் கடையில் வாங்கினார் என்பது வரைக்கும் ஆராய்ச்சி நீண்டு கொண்டே இருந்தது.

நிலைமை கைமீறிப் போவதை உணர்ந்த அன்ரனி, அதனைச் சமாளிக்க அள்ளிவிட்ட சரடுகள் மேலும் அவரை அதளபாதாளத்துக்கே தள்ளின. அந்தச் சரடுகள் என்ன?



எந்தவொரு மனிதனின் வெற்றியும், தோல்வியும் நெருக்கடியான தருணங்களில் அவன் எப்படி எதிர்வினை புரிகிறான் என்பதைப் பொறுத்தே நிர்ணயிக்கப்படுகின்றன.

துரதிர்ஷ்டவசமாக அன்ரனிக்கு பதற்றத்தில் வார்த்தைகள் தறிகெட்டு ஓடி அவரது ஒட்டு மொத்த அரசியல் வாழ்க்கைக்கே கரும்புள்ளியாகிப்போனது. அடுத்து வந்த நாள்களில் இது போல இணையத்தில் படங்களை வெளியிட்டு தலைகுனியும் அன்பர்களுக்கானக் குறிச்சொல்லாக மாறிப் போனார் அன்ரனி.

**மணமானாலும், ஆடிய காலும், பாடிய வாயும் வேண்டுமானால் சும்மா இருக்கலாம், அன்ரனியால் முடியவில்லை. ஒரே நேரத்தில் பல இடங்களில் பல தளங்களில் களமாடிக்கொண்டிருந்த அன்ரனிக்கு விதி இணையத்தில் வீதி உலா வந்தது.**

டுவிட்டரில் வெளியிட்ட படங்கள் ஊடகங்களில் கல்லா கட்ட ஆரம்பித்ததும் முதலில் அன்ரனி உதிர்த்த முத்து தனது டுவிட்டர் கணக்கினை யாரோ 'ஹக்' செய்து அந்தப்படங்களை வெளியிட்டுள்ளார்கள். அது தனது படங்களே இல்லை என்பது தான். பின்னர் "படங்கள் என்னுடையதாக இருக்க வாய்ப்பிருக்கிறது. ஆனால் டுவிட்டர் கணக்கு 'ஹக்' செய்யப்பட்டது என்பதில் மாற்றுக்கருத்து இல்லை" என்றார். இது குறித்து ஏன் பொலிஸிடம் புகார் தெரிவிக்கவில்லை என்ற கேள்விக்கு" இது கேலிக்காக யாரோ செய்திருக்கிறார்கள். அவர்கள் மேல் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க விரும்பவில்லை. ஆயினும் அவர்கள் யாரென்று தெரிந்து கொள்ளும் பொருட்டு தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் விசாரித்து வருகிறேன்" என்று கூறினார்.

மேலே அன்ரனி சொன்ன அனைத்து வசனங்களும் அவருக்கே கடைசியில் ஆப்பாக அமைந்தன. முதலில் அன்ரனி போன்ற பிரபலங்களின் இணையக் கணக்குகள் 'ஹக்'செய்யப்படுதென்பது இணையப் பாதுகாப்பு வல்லுநர்களால் கூர்ந்து நோக்கப்படும். காரணம் எந்த யுக்தியினைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்டவர்களின் கணக்கு களவாடப்பட்டது என்பது முதல், எந்த இடத்தில் ஏற்பட்ட பாதுகாப்புக் குறைப்பாட்டினால் இது நிகழ்ந்தது வரையிலான அனைத்து சமாச்சாரங்களையும் அலசிக் காயப்போட்டு, அதனைப் பாடமாக வருங்கால சந்ததியினருக்கு கல்வெட்டில் எழுதி வைப்பது வழக்கம். அதிலும் அன்ரனி குறிப்பிட்டது இன்று அனைத்து அரசு, தனியார், பாதுகாப்பு அமைப்புகள் தொடங்கி அதிபர், பிரதமர் வரை டுவிட்டரில் பதிவிட்டுத் தள்ளுவது சகஜமாகி விட்ட காலகட்டத்தில் ஒரு டுவிட்டர் கணக்குத் திருட்டுப் போனது இணைய உலகில் சலசலப்பினை உண்டாக்கியது. செய்தி வெளியாகியதும் பீதியில் அமெரிக்க அரசியல்வாதிகள் சில பேர் தங்கள் கடவுச்சொற்களை மாற்றியதும் நடந்தது.

அன்ரனி செய்த தவறு, இது குறித்து கணினிமற்றும் இணையப் பாதுகாப்பு வல்லுநர்களிடம் கலந்தாலோசிக்காமல் போகிற போக்கில் நினைத்தையெல்லாம் ஊடகங்களில் பேசியது தான். முதலில் செல்பேசி, புகைப்படக் கருவிகள் முதலான மின்னணு உபகரணங்கள் மற்றும் கணினியில் உருவாக்கப்படும் அனைத்துக் கோப்புகளுக்கும் Header meta data என்னும் தலைப்பகுதி ஒன்று இருக்கும். அதில் கோப்பு முதன்முதலில் உருவாக்கப்பட்ட இடம், நேரம், உபகரணம், ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட்டால் அது குறித்த தகவல்கள் அனைத்தும் இருக்கும். உதாரணத்துக்கு உங்கள் செல்பேசியில் எடுக்கப்பட்ட படத்தினை நீங்கள் இணையத்தில் பகிர்ந்தால் நீங்கள் வைத்திருக்கும் செல்பேசியின் வகை, தயாரிப்பு நிறுவனத்தின் தகவல், GPS வசதியிருந்தால் எடுத்த இடம், நேரம், திகதி மற்றும் ஒளி வெளிச்சம் குறித்து அனைத்து தகவல்களும் அந்தப் புகைப்படக்கோப்பின் தலைப்பகுதியில் இருந்து அறிந்து கொள்ள முடியும்.

எனவே அன்ரனியின் படம் அவருடைய செல்பேசியில் இருந்து தான் எடுக்கப்பட்டதென்பதை மறைக்க வாய்ப்பேயில்லை.


(வலை விரியும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு 49



இயக்கத்தின் பழைய ஒழுக்கக் கோவைமிகவும் இறுக்கமானது என்றும், தூய்மைவாதப் போக்குடையது என்றும்,காலத்தோடு ஒட்டி பழைய விதிகளில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்றும் பாலா விளக்கினார். தமிழ்ப்பண்பாட்டிலே காதலும் வீரமும் உயர்விழுமியங்களாக இருந்து வருவதாக அவர் சுட்டிக் காட்டினார். பிரபாகரனுடைய காதல் உறவு ,இயக்கத்தின் உள்ளார்ந்த நிலையை மாற்றியமைக்க வல்லது என்பதையும் விளக்கினார். எதிர்காலத்தில் இயக்கத்தின் போராளிகள் தங்கள் காதல் உறவுகளைத் திருமணமாக நிறைவேற்றி, குடும்ப வாழ்க்கையிலும் ஈடுபட இது வழிகோலுவதையும் அவர் எடுத்துரைத்தார். இத்தகைய சம்பவத் திருப்பங்கள் அமைப்பின் வளர்ச்சிக்கும் அதன் பெயருக்கும் நல்லதே விளைக்கும் என்றும் பாலா வாதிட்டார். தங்களின் தலைவரின் பிரமச்சாரிய வாழ்க்கைக்கு முடிவு வருவது தடுக்க முடியாததாகி விட்டது என்பதை மூத்த போராளிகள் தயக்கத்தோடு ஏற்றுக் கொண்டார்கள். பிரபாகரனுடைய காதலும் திருமணமும் இயக்கம் மீது ஆழமான மாற்றங்களை ஏற்படுத்தியது. போராளிகள் ஒவ்வொருவரும் காதல் வயப்பட்டார்கள்; திருமணம் புரியவும் விரும்பினார்கள். இன்று ,திருமணமும் குடும்ப வாழ்க்கையும் இயக்கத்திலே சாதாரணமாக ஆகிவிட்டது.

இயக்கம் மேலும் விரிவடைய எங்கள் திருவான்மியூர் வீட்டில் இட நெருக்கடி பெருகியது. செய்ய வேண்டிய பணிகளுக்கு அந்த வீட்டில் இடம் போதவில்லை. மேலும் பெரிய வீடொன்றை வாடகைக்கு அமர்த்தத் தீர்மானித்தோம். இயக்கத்தில் வந்து இணையும்பெண்களின் தளமாக அதுவே திகழ வேண்டும் என்றும் முடிவு செய்தோம். இதற்கென நாம் வாடகைக்கு அமர்த்திய வீட்டில் நிறைய அறைகள் இருந்தன. பெருந்தொகைப் பெண் போராளிகள் தங்குவதற்கு ஏற்றதாகவும் அது அமைந்தது. இந்தப் புதிய வீட்டில் மேல்மாடிஅறை ஒன்று பாலாவுக்கும் எனக்கும் கிடைத்தது. இந்த அறையோடு ஒட்டியதாக மாடி முன் கூடம் ஒன்றும் இருந்தது. மேலும் மேலும் இளம் பெண்கள் விடுதலைப் புலிகள் அணியிலே சேர்ந்து, நாம் இருந்த வீட்டுக்கு வந்த போதிலும் எமது அறை எமக்கு வேண்டிய தனிமையைத் தந்தது. இனி,இதமான மாலைவேளைகளில் பாலாவும் நானும் மாடி முன் கூடத்தில் தனியே அமர்ந்து நிறைப் படிக்கவும் விவாதிக்கவும் முடிந்தது.

தமிழ் மக்களுக்கு எதிரான 1983 ஜீலை மாதக் கலவரங்களை அடுத்து இலங்கையின் வட பாகத்தில் ஆர்வம் மிக்க பல இளம் பெண்களை ரெலோ அமைப்பின் சிறீசபாரத்தினம் திரட்டி, பாக்கு நீரிணையைக் கடந்து சென்னைக்கு இராணுவப் பயிற்சிக்காக கொண்டு வந்திருந்தார். தமிழ் நாடு சென்றடைந்த மறுகணமே, பெண்களுக்கான பிரிவு எதையும் ரெலோ நிறுவவில்லை என்பதையும் தம்மை வரவேற்று ,தங்க வைத்து பராமரிக்க எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை என்பதையும் அந்த இளம் பெண்கள் நேரில் கண்டுபெருமளவு மனவிரத்தியடைந்தார்கள். அவர்களை விடுதலைப் புலிகள் சேர்த்துக் கொள்வார்களா என்று சில கத்தோலிக்க குரவர்கள் ரெலோவின் சார்பாக விடுதலைப் புலிகளிடம் விசாரித்தார்கள். இந்தப் பெண்களின் நிலைமை பிரபாகரன் செவிகளுக்கு எட்டியதும், இயக்கத்திலே அவர்கள் சேருவதற்கு அவர் சம்மதித்தார். அது தவிர, முதல் பயிற்சிப் பாசறையைத் தொடக்கும் அளவுக்குப் போதுமான பெண்கள் திரண்டதும், அவர்களுக்கான இராணுவப் பயிற்சித் திட்டம் ஒன்றையும் புலிகள் ஆரம்பிப்பார்கள் என்றும் உறுதி மொழிந்தார். எனவே, நாம் புது வீடு மாறியதும்,எம்மோடு வாழ்ந்து கொண்டிருந்த நான்கு மாணவிகளோடு ரெலோவிலிருந்து அதிருப்தியோடு வந்த இளம் பெண்களும் சேர்ந்து கொண்டார்கள். இவர்களில் ஒருவர் தான் சோதியா, பல ஆண்டுகளின் பின் விடுதலைப்புலிகளின் மகளிர் இராணுவ அணியின் தலைவியாக உயர்ந்தவர்.

(புதிவு தொடரும்)

## இவ்வார இராசி பலன்

27.08.2014 -02.09.2014

### மேஷம்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**



பிறர் மனம் அறிந்து பேசுவீர்கள். சொல்லில் வசீகரம், உண்மையின் வெளிப்பாடு இருக்கும். உடன் பிறந்தவர் கூடுதல் அன்பு பாராட்டுவர். புத்திரரின் செயல்களை ஒழுங்குபடுத்துவது அவசியம். வழக்கு விவகாரத்தில் வெற்றி கிடைக்கும்.இல்லறத்துணையின் உடல் நலம் ஆரோக்கியம் பெற, மருத்துவ சிகிச்சை உதவும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம். தொழில் வியாபாரத்தில், சிறுஅளவில் குறுக்கீடு வந்து பின்னர் சரியாகும். குடும்ப பெண்கள் அக்கறை நிறைந்த மனதுடன் செயல்படுவர்.

### ரிஷபம்

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**



ஆர்வமுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். புதியவர்களின் அன்பு, உதவி கிடைக்கும். வீட்டுத் தேவை தாராள பணச்செலவில் நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் மங்கலநிகழ்வு உண்டாகும். புத்திரர் எதிர்பார்ப்பு தாமதம் ஆவதால், வருத்தம் கொள்வர். நிலுவைப் பணம் வசூலாகும்.இல்லறத்துணை, உங்களின் நல்ல குணம் பாராட்டுவார். தொழில் வியாபாரத்தில் அபிவிருத்தி, உபரி பணவரவு உண்டு. பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

### மிதுனம்

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**



குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழல் நிலவும்.புத்திரர் ஆர்வமிகு செயலால் சிரமம் எதிர்கொள்ள நேரிடலாம்.கவனம் தேவை. பூர்வ ஜென்ம சொத்தில் பராமரிப்பு பணச்செலவு கூடும்.இல்லறத்துணையின் ஆலோசனை மனதில் புதிய மாற்றம் தரும்.தொழில் வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை் செழிக்கும்.பணியாளர் திறம்பட தொழில் புரிந்து வெகுமதி பெறுவர்.பெண்கள் உறவினர்களின் நன்மதிப்புப் பெறும் வகையில் நடந்து கொள் வர்

### கடகம்

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**



அதிர்ஷ்டவசமாக சில பணி நிறைவேற, எதிர்கால வாழ்வில் நம்பிக்கை தரும். பொது விஷயங்களில் கருத்து சொல்ல வேண்டாம். தொலைதூர வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரரின் உடல் நலத்திற்கு, ஒவ்வாத உணவு வகை உண்பதை தவிர்க்க சொல்லுங்கள். தொழில் வியாபாரத்தில், சிறுகுறுக்கீடு வந்து பின்னர் சரியாகும். பணியாளர் நிர்வாகத்தின் சட்டதிட்டம் தவறாமல் பின்பற்றவும். குடும்ப பெண்கள் பணச்செலவில் சிக்கனம் மேற்கொள்ள வேண்டும்.

### சிம்மம்

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**



தாழ்வுமனம், கோபம் தவிர்த்து நம்பிக்கையுடன் பணிபுரிவது அவசியம். உடன்பிறந்தவர் இயன்ற அளவில் உதவுவர். தாயின் தேவை நிறைவேற்றுவீர்கள். புத்திரர் ஆடம்பர எண்ணங்களுடன் நடந்து கொள்வர். எதிரி சொந்த சிரமங்களால் விலகுவர். தொழில் வியாபா ரத்தில் அபிவிருத்தி பணி மகிழ்ச்சி தரும். பணியாளர் தொழில் நுட்பத்திறன் வளர்த்துக் கொள்வர்.

### கன்னி

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**



உடல் நலத்தில் கூடுதல் அக்கறை வேண்டும். பேசும் வார்த்தை கடினமாக அமைந்து, பிறர் மனம் கஷ்டப்படுத்தலாம். புத்திரரின் நற்செயல் பெருமை தேடித்தரும். பணக்கடன் பெறுவதில் நிதானம் வேண்டும். இல்லறத்துணை ஆறுதல் மனபாங்குடன் நடந்து கொள்வர். தொழிலில் வருகிற இடையூறு தாமதமின்றி சரி செய்யவும். பணியாளர் பணியிடத்தில் விவாதம் பேச வேண்டாம். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும்.

### துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**



இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள். புத்திரரின் அவசர செயல்களை ஒழுங்கு செய்வது நல்லது. பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள்.இல்லறத்துணை வழி சார்ந்த உறவினர்களிடம் அதிக எதிர்பார்ப்பு வேண்டாம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராக, சில மாற்றம் பின்பற்றவும். பணியாளர்களுக்கு குடும்ப செலவு அதிகரிக்கும். குடும்ப பெண்கள், புறம்பேசுபவர்களிடம் விலகுவது நல்லது. மாணவர்கள், அதிக கவனமுடன் படிக்க வேண்டும்.

### விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**



உடன்பிறந்தவர்கள் ஓரளவு உதவுவர். அறிமுகம் இல்லாதவர்களுக்கு வீடு, வாகனத்தில் இடம் தர வேண்டாம். புத்திரர் நண்பருக்கு இணையான அன்புடன் பழகுவர். எதிர்மறை கருத்து பேசுபவரிடம் விலகவும். இல்லறத்துணை குடும்ப நலன் சிறக்க, உரிய ஆலோசனை சொல்வார். தொழிலில் முன்னேற்றம் பெற, தேவையான அரசாங்க உதவி பெறலாம். பணியாளர், பணச்செலவில் சிக்கனம் பின்பற்றவும்.

### தனுசு

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**



உறவினர், நண்பரின் அன்பு வார்த்தை மனதில் நம்பிக்கை தரும். வாகன பயன்பாடு அளவுடன் மேற்கொள்வீர்கள். புத்திரரின் நற்செயல் பெற்றோருக்கு பெருமை தேடித்தரும். உங்களின் நலம் விரும்புபவர் சில உதவி வழங்குவார். இல்லறத்துணை கூடுதல் அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். மகிழ்ச்சி, தன்னம்பிக்கை கூடும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணியாளர், தன்கடமை உணர்ந்து பணியில் நற்பெயர் பெறுவர்.

### மகரம்

**உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்,திருவோணம்,அவிட்டம்1,2ஆம்பாதங்கள்**



வார்த்தையில் நிதானம் நற்பெயரை பாதுகாக்கும். தாயின் உடல் நலத்திற்கு மருத்துவ சிகிச்சை உதவும். புத்திரர் விரும்பிய பொருள் பெறுவதில் தாமதம் ஏற்படலாம். எதிரியின் பொறாமை மிகுந்த செயலை வெறுத்து ஒதுக்குவீர்கள்.இல்லறத்துணையின் கருத்துகளில் உள்ள நியாயம் உணருவீர்கள். தொழில், வியாபார நடைமுறையில் உள்ள அனுகூலம் கவனமுடன் பாதுகாப்பது அவசியம். பணியாளர்கள், பணி இலக்கு நிறைவேற்ற கால அவகாசம் தேவைப்படும்.

### கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**



புதிய முயற்சியில் முன் யோசனையுடன் ஈடுபட வேண்டும். சமூக நிகழ்வு மாறாக அமைந்து, மன வருத்தம் தரலாம். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு பின்பற்ற வேண்டும். எதிரியின் அவதூறு பேச்சுக்களை பொருட்படுத்த வேண்டாம்.இல்லறத்துணையின் மனதில் உங்கள் மீதான நம்பகத்தன்மை குறையாமல் நடந்து கொள்ளவும். தொழில், வியாபார நடைமுறை தாமதகதியில் இயங்கும். பெண்கள், பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க கூடாது.

### மீனம்

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**



நற்குணம் உள்ளவர்களின் அன்பு, ஆதரவு கிடைக்கும். உடன் பிறந்தவரின் வாழ்வு வளம் பெற உதவுவீர்கள். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புஎதிரி சொந்த சிரமங்களால் விலகுவர். இல்லறத்துணை தாயின் பரிவுடன் உங்களை பார்த்துக் கொள்வார். தொழில், வியாபாரத்தில் முன்னேற்ற பலன் உண்டு. பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். குடும்ப பெண்கள், சேமிப்பு பணத்தில் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தமிழக வரலாற்றில் பல்லவர்கள் வரலாறு ஒரு முக்கியமான வரலாறு. அவர்கள் இல்லாது இருந்தால் இன்றைக்கு தமிழ் மொழியும் எமது கலைகளும் தலைகீழாக மாறி இருக்கும். தொடர்ந்தும் மூவேந்தர்கள் என்று சேர, சோழ, பாண்டியர்களை மட்டும் புகழ்ந்து கொண்டு இருக்காமல் அண்ணளவாக 700 ஆண்டுகள் தனித்தும் அதற்கு முதல் 400 ஆண்டுகளாக சோழர்களுடன் இணைந்தும் நின்ற பல்லவர்கள் என்ற பெயரைப் பாவிக்காமல் சோழர்களுக்கு உதவியாக தென் இந்தியாவை ஆண்ட பல்லவர்களை வரலாற்றில் சிறப்பிக்க வேண்டும்.**

# ஈழத்தமிழர்களே பல்லவர்களா?



புத்தர் இலங்கைக்கு வந்த கி. மு. 6 ஆம் நூற்றாண்டு காலத்தில் ஈழத்தில் 3 கோடி நாகர்கள் இருந்தார்கள் என்று வரலாற்று ஏடுகளில் சொல்லப்படுகிறது. அதன் பின்னர் கி. மு. 200-300 இல் ஈழத்தை தாக்கிய மிக பெரிய கடல் அழிவு ஈழத்தின் வட பகுதியையும் வட மேற்கு பகுதியையுமே பெரும் தாக்கத்துக்கு உள்ளாக்கியது எனக் கருதப்படுகின்றது. இந்தக் காலத்தில் கடல் அழிவில் தப்பி பிழைத்த மக்கள் தொண்டை மண்டலத்தில் சென்று வாழ்ந்தார்கள்.

இவர்கள் தொண்டை மண்டலத்துக்கு சென்று வாழ்ந்ததுக்கு ஒரு காரணம் இருக்கிறது. அந்தக் காலத்தில் அந்தப் பகுதியை ஆண்ட சோழ அரசன் கிள்ளி வளவன் (சிலர் நெடும் கிள்ளி என்றும் எழுதி இருக்கின் றார்கள். சிலர் கிள்ளி வளவனின் மகனே நெடும் கிள்ளி என்றும் எழுதி இருக்கின்றார்கள்) ஈழத்து மணிபல்லவ நாக இளவரசி பீலியவளையை திருமணம் செய்து இருந்தான். அவர்களுக்குப் பிறந்த மகனும் பிற்காலத்தின் தொண்டமான் இளம்திரை யன் என அழைக்கப்பட்ட வனுமான இளவரசன் இந்தக் கடல் அழிவில் குழந்தையாக தொண்டை மண்டலம் வந்து சேர்ந்தான். இளமையில் (குழந்தையில்) திரையில்(அலையில்) அகப்பட்டு வந்ததாலேயே அவனுக்கு காரணப் பெயர் இளம்திரையன் என்றாயிற்று. எனவே அவனுடன் திரையில் பாதிக்கப்பட்டு வந்த மக்களும் தொண்டை மண்டலத்தில் வந்து வாழ்ந்தார்கள். இவன் வந்த பின்னரே இந்த இடத்துக்குத் தொண்டை மண்டலம் என்று பெயர் வந்தது என்றும் கருத்து இருக்கிறது. அதற்கு ஈழத்தின் தொண்டை மானாறு பற்றி குறிப்பிட் டும் கடல் அழிவால் இலங்கையின் தொண்டை போன்ற வடிவில் அமைந்த பகுதியில் இருந்து வந்தவன் என்பதாலும் தொண்டை மண்டலம் என்று பெயர் வந்தது என்றும் கருத்து இருக்கிறது.

ஒரு காலத்தில் இலங்கை பூராக மணிபல்லவம் என்று அழைக்கப்பட்டது என் றும் யாழ். குடாநாடுதான் மணிபல்லவம் என்றும் அதில் ஒரு தீவு தான் மணி பல்லவம் என்றும் பல கருத்துக்கள் இருந்தாலும் மணிபல்லவம் என்பது ஈழம் சார்ந்தது என்பது மட்டும் உறுதி.

மணி பல்லவத்தில் இருந்து தொண்டை மண்டலத்துக்கு வந்தகாலத்தில் இவர்கள் சோழர்களுக்கு போர்களில் உதவியாக இருந்தார்கள். அதனால் சோழராச்சியம் மிகவும் விரிவடைந்தது. சோழ ராச்சியம் விரிவடைந்து சில காலத்துக்கு பின் தொண்டை மண்டலத்துக்கு இளம்திரையன் அரசன் ஆனான். பின்னர் சோழர்களுக்கு வம்சக் குழப்பம் ஏற்பட்டு சோழ ராச்சியம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு காஞ்சி புரத்திலும், உறையூரிலும் இரு அரசாக இயங்கத் தொடங்கியது. காலப்போக்கில் இவர்கள் மோதி நிற்க ஈழத்தில் இருந்துவந்தவர்கள் இளம்திரையனுக்கு பின்னர் பல்லவர்களாக உருவெடுத்தார்கள்.

தமிழக மற்றும் ஆந்திர ஆய்வாளர்கள் பல்லவர்கள் ஈழத்தில் இருந்து வந்த வர்கள் என்ற உண்மையை மறைக்க பல தரப்பட்ட பொய்களைக் கொண்டு வந்தார்கள். சிலர் பல்லவர் கள் தமிழர்களே இல்லை என்ற கருத்தைக் கூட முன்வைத்தார்கள். சிலர் பாரசீகத்தில் இருந்து வந்தவர்கள் என்று கூடப் பொய் சொன்னார்கள். பக்கத்தில் இருந்த மணி பல்லவத்தில் இருந்து வந்த வர்கள் தென்னிந்தியாவை அண்ணளவாக 700 வருடங்கள், சிற்றரசாகவும் தென்னிந்தியா முழுவதும் பேரரசாகவும் பின்னர் சிற்றரசாகவும்ஆண்டார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள இந்திய ஆய்வாளர்களுக்கு மனம் இல்லை. அதனாலேயே இன்றுவரை வரலாற்றுக் குழப்பம் தொடர்கின்றது.

தென்னிந்தியா என்றால் சேர, சோழ பாண்டியர் என்ற மூவேந்தர் தான் என்ற மூவேந்தர் மாயை 700 வருடங்கள் தென்னிந் தியாவை ஆண்ட பல்லவர் களான ஈழத்தமி ழர்களை ஏற்றுகொள்ள மறுக்கின்றது.


பல்லவர்கள் ஒரு போதும் சோழர்களை ஏமாற்றி அரசைப் பறித்த வர்கள் அல்ல. உதவியவர் களுக்குத் துரோகம் செய்தவர்களும் அல்ல. சோழர்கள் இரண்டு பட்டு நின்ற வேளையில் பாண்டியர்களும் அவர்களோடு மோதி நின்றார்கள். இவர்கள் தொண்டை மண்டலத்தில் சிற்றரசாக தனித்துச் செயற்படத் தொடங்கிய காலம். இது அண்ணளவாக இளம்திரையனுக்கு 400 வருடங்களுக்குப் பின்னர் ஆகும். (இளம்திரையன் காலம் கி. மு. 225. பல்லவர்கள் தனித்துச் செயற்படத் தொடங்கியது கி. பி. 225 )அதுவரை இளம்திரையன் வம்சத்தினர் சோழர்களுக்கு உதவியாக இருந்து இருக்கின்றார்கள். கி. பி. 225 அளவில் இந்தியாவின் வடக்கில் இருந்து வந்த களப்பிரர்கள் தமிழகத்தின் பகுதிகளை கைப்பற்ற சில பத்து ஆண்டுகளாக போராடி 250-300 அளவில் தொண்டை மண்டலம் தவிர்ந்த ஏனைய பகுதிகளைக் கைப்பற்றினார்கள். இவர்களுக்கும் தொண்டை மண்டலத்தை ஆண்ட பல்லவர்களுக்கும். 300 ஆண்டுகள் தொடர்ந்தும் போர் நடந்தது. கி. பி. 575 இல் களப்பிரர்களை முழுமையாக அழித்து முழுத் தமிழகத்தையும் பல்லவர்கள் கைப்பற்றினார்கள்.

களப்பிரர்கள் ஆண்ட காலத்தை தமிழக வரலாற்றில் இருண்ட காலம் (கி பி 250-575)என்று அழைக்கின்றார் கள். இந்தக் காலத்தில் தான் கடைச் சங்கம் முடிவுக்கு வந்தது. தமிழ் மொழி வளர்ச்சி முழுமையாக தடைப்பட்டது. சைவக் கோவில்கள் இடிக்கப்பட் டன. சைவ சமயத்தவர்கள் தாக்கப்பட்டார்கள். காளாமுகர்கள், கபாலிகர் கள் என புதிய பல்வேறு சமயங்கள் உருவாகியது. இவ்வாறு மொத்தம் 72 சமயங்கள் உருவாகின என்று சில குறிப்புக்களில் வருகின்றது. இவர்களிடம் இருந்து தமிழகத்தை கி. பி .575 இல் முழுமையாக மீட்டு தமிழகத் தமிழர்களின் வாழ்வை உறுதிப்படுத்தி கட்டடக் கலைகள், சிற்பக் கலைகள், ஓவியக் கலைகள் எனக் கலைகளை வளர்த்து, நாயன்மார்களை ஆதரித்து பக்தி இலக்கியங்களைத் தோற்றுவித்தவர்கள் பல்லவர்கள். பல்லவர்களின் காலத்தில் தான் சக்தி இலக்கியங்களை இயற்றிய ஆதி சங்கரரும் வாழ்ந்தார். (சங்கரர்காலம் கி. பி. 788-820) இவர் தமிழ் உலகுக்கு செய்தது மகத்துவமான சேவை. சமயப் போட்டியால் நலிவுற்று சண்டை இட்டுக் கொண்டு இருந்த சமயங்களில் மாற்றுக் கருத்துக்கொண்டவர்களை வாதத்தில் வென்று ஒத்து ழைத்து நின்ற 6 சமயங் களை ஒன்றாக இணைத்து இந்துமதம் என்பதைத் தோற்றுவித்தார்.

எனவே தமிழக வரலாற் றில் பல்லவர்கள் வரலாறு ஒரு முக்கியமான வரலாறு. அவர்கள் இல்லாது இருந்தால் இன்றைக்கு தமிழ் மொழியும் எமது கலைகளும் தலைகீழாக மாறி இருக்கும். தொடர்ந்தும் மூவேந்தர்கள் என்று சேர, சோழ, பாண்டியர்களை மட்டும் புகழ்ந்து கொண்டு இருக்காமல் அண்ணளவாக 700 ஆண்டுகள் தனித்தும் அதற்கு முதல் 400 ஆண்டுகளாக சோழர்களுடன் இணைந்தும் நின்ற பல்லவர்கள் என்ற பெயரைப் பாவிக்காமல் சோழர்களுக்கு உதவியாக தென் இந்தியாவை ஆண்ட பல்லவர்களை வரலாற்றில் சிறப்பிக்க வேண்டும். இவர்கள் கடல் அழிவால் தொண்டை மண்டலம் வந்த பின்னரே (கி மு 200-300)இன்று தமிழ் கூறும் நல்லுலகம் வைத்திருக்கும் அநேகமான நூல்கள் உருவாகின. இதை யாரும் மறுக்க முடியாது. தொல்காப்பியம் எழுத்துவடிவம் பெற்றதாயினும் சரி மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்கள் எழுத்துவடிவம் பெற்றதாயினும் சரி, சங்க இலக்கியங்கள் அகநானூறு புறநானூறு தொடங்கி ஐம் பெரும் காப்பியங்கள் வரை அனைத்தும் எழுத்துவடிவம் பெற்றதாயினும் சரி எல்லாம் சிந்தித்து பார்த்தால் இவர்கள் வருகைக்குப் பின்னரே ஏற்பட்டது. அதுவரை எழுத்துவடிவம் பெறாமல் செவிவழியாகவே தமிழிலக்கியம் இருந்து வந்தது. எனவே இலக்கியங்களின் எழுத்துவடிவத் தோற்றத்துக்கு ஈழத்தவர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என்பது வெளிப்படை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# அம்மாவும் ஆட்டுக்குட்டியும்

தபின்

ஆட்டுக்குட்டியள் இரண்டும் ஒண்டையொண்டு தள்ளிக் கொண்டு தாயாட்டின்ர மடியில பால் குடிக்கிறதைப் பார்க்கேக்க சந்தோசமாகத்தான் கிடக்குது. நான் ஒவ்வொரு நாளும் இதுகள் பால் குடிக்கிறதைப் பாக்கேக்க எப்பவும் மணி (கிடாய்க்குட்டி) வலப்பக்க முலையி லையும் செல்வி (மறிக்குட்டி) இடப்பக்க முலையிலும் தான் பால் குடிக்குங்கள்.

ஒரு நாள் கூட அதுகள் முலை மாறிக் குடிச்சதை நான் காணேலை. நன் ஆடுகளைப் பிராக்குப் பார்த்துக் கொண்டு நிக்கேக்க வாசல்ல ஆரோ வாற மாதிரி கிடந்திது. ஆரெண்டு எட்டிப் பாத்தன். அம்மா தான்!

வேத்து , விறுவிறுத்து, கையில உடுப்பு "பாக்கோட" வாறவாவைப் பக்க பாவ மாத் தான் கிடக்குது. "பாக்கை" ஒரு பக்கமாப் போட்டிட்டு அம்மா தொப்பெண்டு ஈசிச் சேருக்குள் சாஞ்சிட்டா.

கழுகுக்கு மூக்கில வேர்க்கிற மாதிரி அம்மா உடுப்போட வந்தது பக்கத்து வீட்டில விளையாடிக் கொண்டு நிண்ட செந்தூருக்கு என்னெண்டுதான் தெரிஞ்சுதோ? தெரியேலை. விளையாடின களைப்போட ஓடிவந்து உடுப்பு "பாக்கை" எடுத்துப் பிய்ச்சு, அதுக்குள்ள என்னென்ன கிடக்கு தெண்டு நோண்டத் துடங்கிட் டான். அவன் அப்படிப் பிய்க்கி றதைப் பார்க்க எனக்கு குரங்கு கையில பூமாலை எண்ட பழமொழி தான் ஞாபகத்துக்கு வந்தது.

அம்மாவின்ரை வெள்ளைச் சீலை, ரண்டு ரவுசர்த் துணி ரண்டு சேர்ட் பிளவுஸ் ஸ்கேட் எண்டு உள்ளுக்க இருந்ததை எல்லாம் எடுத்து வெளியில போட்டான் நான். என்ர சட்டையையும் ஸ்கேட்டையும் எடுத்துக் கொண்டு அறைக் குள் போய் அளவு சரியாய் இருக்குதோ எண்டு போட்டுப் பாக்கத் துடங்கேக்க தான் அம்மாவும் தம்பியும் கதைக்கிறது என்ரை காதில விழுந்தது.

"எணேய் அம்மா! இந்த இரண்டு ரவுசர்த் துணியையும் கொண்டு போய் ரெயிலரிட்டக் குடுத்திட்டு வரட்டே?"

"உனக்கு எல்லாத்துக்கும் அவசரம்! இந்தா! ரெயிலரிட்ட தைக்கக் குடுக்கேக்க அளவைச் சரியாய் குடு பேந்து போன முறை மாதிரி அங்க இழுக்குது, இஞ்சை இழுக்குது எண்டு என்ரை உயிரை வாங்காதை"

ரண்டுபேரும் கதைச்சு முடிக்கிறதுக்குள்ள நான் சட்டையையும் பாவாடையையும் போட்டுக்கொண்டு வெளியால வந்தன். அப்ப அம்மாவுக்கு என்னத்துக்கு எண்டு தெரியாமல் ரண்டு கண்ணும் கலங்கிப் போட்டுது.

"எணேய் இப்ப என்ன நடந்திட்டுது..? ஏனணை ஏன் இப்படி அழுகிறாய் ?"

"ஒண்டுமில்லையடி பிள்ளை" எண்டா லும் அம்மான்ர மனசுக்குள்ள இன்னமும் அந்தக்கவலை இருக்கிற மாதரி எனக்குப் பட்டுது. எப்பிடித்தான் கெஞ்சிக் கேட்டாலும் எங்கட அம்மா ட்டயிருந்து ஒரு விசயமும் அறியே லாது. நைசா அம்மா குசினிப்பக்கம் போறதைப் பாத்தும் பாக்காத மாதிரி நான் கண்ணா டிக்கு முன்னால நிண்டு கொண்டு சட்டை யை வடிவு பாத்தன். கொஞ்ச நேரம் செண் டிருக்கும். அம்மா இறுக்கி அழுகிற சத்தம் கேட்டுது. ஜன்னலுக்குள்ளால மெல்ல எட்டிப் பாத்தன். அம்மா விக்கி விக்கி அழுது கொண்டிருந்தா.

அம்மா ஒரு அஞ்சு வருசமா இப்பிடித் தான். ஒரு நல்ல நாள் பெரிய நாள் எண்டால் காணும். உடனே குசினிக்க போய் அழத் தொடங்கி விடுவா. அம்மாவை அவவின்ரபாட்டில அழவிட்டிட்டு நான் முத்தத்திலே காயப்போட்ட புழுக் கொடியலை எடுத்து கொண்டு வந்து உள்ளுக்குள்ள வைச்சுப் போட்டு நிமி ரேக்க அண்ணையின்ரபடம்கண்ணிலை பட்டுது.

அண்ணை!

'அவன் இப்ப எங்க இருக்கிறான்?'

'கஞத்துறையிலயா? காங்கேசன் துறையிலேயா? இல்லாட்டிச் சிலவேளை ....?!செம்மணிக்கையா...?'சீச்சீ! அப்படியொண்டுமிருக்காது! அண்ணாவுக்கொண்டும் நடந்தி ருக்காது...

"அக்கா! உன்ரை சைக்கிளை ஒருக்கா தாறியோ? ரெயிலர்க் கடை மட்டும் போட்டு வாறன்" என்ரை யோசினையைக் குழப்பிற மாதிரி செந்தூர்வந்து நிண்டான்.

"ஏன் உன்ரை சைக்கிளுக்கென்ன? அதிலபோட்டுவாவன்?" எண்டு சொல்லிப் போட்டு கொஞ்சம் அங்கால போனேன். ஆனாச் செந்தூரெண்ட குரங்கு என்னை விடுகிறதாய் இல்லை.

"அதக்கா.. ..முன்சில்லு காத்துப் போட் டுது. ரெண்டு மூன்று தரம் காத்தடிச் சுப் பாத்திட்டன். நிக்குதே இல்லை. அடிச்ச வுடன காத்து போகுது"

அண்ணை!
'அவன் இப்ப எங்க இருக்கிறான்?'
'கஞத்துறையிலயா? காங்கேசன் துறையிலேயா? இல்லாட்டிச் சில வேளை ....?!
செம்மணிக்கையா...?
'சீச்சீ! அப்படி யொண்டு மிருக்காது! அண்ணாவுக்கொண்டும் நடந்தி ருக்காது...

"கண்ட கண்ட பத்தை பரட்டை வழி யள்ள பெடியளோடை ஊர் மேய்ஞ்சு கொண்டு திரிஞ்சால் காத்துப் போகும் தானே..!"

என்ரை பேச்சைக் கேட்டு அவன் தலை யைக் குனியேக்க மேசையில் கிடந்த சைக்கிள் துறப்பை எடுத்து நீட்டினன். ஒண்டும் பேசாமல் வாங்கிக் கொண்டு போட்டான்.

அம்மா ஒரு மாதிரி அழுகையை நிப்பாட்டிப் போட்டுக் கிணத்தடிக்குப் போய் முகம் கழுவிப் போட்டு வந்து றோட்டை உத்துப் பாத்துக் கொண்டு வாசலில் இருந்தா.

அவாவைப் பார்க்க எனக்குப் பாவமாய் கிடந்திச்சு. கிட்டப் போய் அவாவின்ரை தோளில கையை வைச்சன். என்ன? எண்டு கேக்கிற மாதிரி அவ என்னைத் திரும்பிப் பாத்தா!

"அம்மா நீ அழாதையணை எண்டைக்கோ ஒரு நாளைக்கு அண்ணை கட்டாயம் திரும்பி வருவான்!"

அம்மா ஒண்டும் சொல்லேல்லை. என்னைக் கொஞ்ச நேரம் உத்துக் பாத்துக் கொண்டு நிண்டா. பேந்து தன்ரை பாட்டில "ஓ! அவன் வருவான் "அம்மா வைத் தேடி வருவான்..." எண்டு முணு முணுத்தா. நான் இனியும் அண்ணை யைப்பற்றி ஏதும் கதைச்சா அம்மா அழுது போடுவா" பேசாமல் அங்காலிப்பக்கமாய் பாக்கத் தொடங்கினன்.

திரும்பவும் ஆட்டுக்குட்டியள் பால் குடுக்கிறது கண்ணிலை பட்டுது.

அம்மாவோடை அண்ணையைப் பற்றிக் கதைக்காமல் இருக்கிறதுக் காண்டி கொஞ்ச நேரம் அதுகளைப் பிராக்குப் பாத்துக் கொண்டிருந்தேன்.

தாயாடு ரண்டு குட்டியளையும் தன்ரை முகத்தாலை தேய்ச்சு தேய்ச்சு அதுகளுக்கு தன்ரை அன்பைக் காட்டிக் கொண்டிருந்தது. இப்பவும் மணி வலப்பக்க முலையிலையும் செல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

இடப்பக்க முலையிலும் தான் பால் குடிக்குதுகள். எப்படி இதுகள் ரண்டும் இப்படி வலப்பக்கம் உனக்கு, இடப்பக்கம் எனக்கு எண்டு பிரிச்சு வைச்சுக் குடிக்குதுகள்? அப்படிப் பிரிச் சுக் பாக்கிறதைத் தானே ஆறாவது அறிவு எண்டு சொல்லுகினம். அப்படியெண்டால் ஆடுகளுக்கும் ஆறறிவு இருக்குதோ?

இப்படி நான் கண்டபடி யோசிச்சுக் கொண்டிருக்கேக்க தான் நான் கனவிலையும் நினைச்சுப் பாக்காத அது நடந்தது.

செல்வி தாயிட்ட பாலைக் குடிச்சிட்டு ஓட
செல்வியத் துரத்திக் கொண்டு சந்தோசத்தில் பின்னால மணி ஓட
செல்வி இன்னும் இறுக்கி ஓட
இதுவும் துள்ளிக் கலைக்க
அது கிணத்துக் கட்டைத் தாண்டிப் பாய
மணியும் பாய
இடையில கட்டுத் தடுக்கி மணி "பொத்" எண்டு கிணத்துக் குள்ள விழுந்திட்டுது!

'ஐயோ!'

கத்திக் கொண்டு கிணத்தடிக்கு ஓடினன். எனக்குப் பின்னால அம்மாவும் ஆத்துப் பதைச்சுக் கொண்டு ஓடி வந்தா. கிணத்துக்குள்ள மணி கொஞ்ச நேரம் நீந்த வெளிக்கிட்டுப் பேந்து ஏலாமல் போக தண்ணிக்குள்ள கீழ போறதும் வாறதுமாய் இருந்திச்சுது.

எனக்கெண்டால் ஒரே அந்தரமாப் போட்டுது. என்னெண்டு மணியைக் காப்பாத்துறதெண்டு தெரியேலை. துலாவை நல்லாத் தாட்டு, மணி ஏறி வரட்டுமெண்டு வாளியை அதுக்கு கிட்ட விட்டன். ஆனால் தண்ணிக்கை கன நேரம் நிண்டதால அதின்ர உடம்பு விறைச்சுப் போட்டுது போல. அது வாளிக்கை ஏறவேயில்லை. இந்த நேரம் பாத்து செந்தூரும் ரெயிலர் கடைக்குப் போட்டான். இல்லாட்டிக்கு இத்தறிக்கு கிணத்துக்க குதிச்சு மணியைத் தூக்கியிருப்பான். மெல்ல மெல்ல மணி சோர்ந்து போற மாதிரி தெரியுது!

"ஐயோ! அம்மா அது... .. கிணத்துக்கை தாழுது! பிறகு ஒரு மாதிரி தன்னால ஏலு மட்டும் காலை அடிச்ச அடிச்சு மேலே வரப்பாக்குது. பேந்து கிணத்துக் கட்டில கத்திக் கொண்டு நிண்ட தன்ர தாயையும் செல்வியையும் அம்மாவையும் என்னையும் வடிவாய்ப் பார்த்திட்டு 'ப்ளுக்'! மணி தண்ணிக்குள்ள தாண்டு கீழே போட்டுது திரும்ப வரும் என்று பார்த்தன் வரேலை!

"ம் ம் மேய்ய்ங்.. .. .. ம் ம் மேய்ய்ங்.. ..

"தாயாடு கத்திக் கொண்டே கிணத்தைச் சுத்தி சுத்தி வந்து கொண்டிருந்திச்சுது. எனக்கு அதைப் பாக்க "டப்" பென்று அம்மாவின்ர ஞாபகந்தான் வந்திது. அவாவும் இப்படித் தானே.. .. .. !

அண்ணாவை அவங்கள் பிடிச்சுக் கொண்டு போகேக்கை கத்தியழுதவா! அம்மாக்கும் தாயாடு கத்துறதைப் பாத்தவுடன் அண்ணையின்ர ஞாபகம் வந்துட்டுது போல கிடக்குது! அவவும் அழுது கொண்டு தாயாட்டின் முதுகில, மெல்லத் தடவி விட்டா. அது அவவின்ர முகத்தோட தன்ர முகத்தை தேய்ச்சு தேய்ச்சு இன்னமும் இறுக்கி கத்த தொடங்கி விட்டுது.

அதுக்குள்ள செந்தூரும் வந்திட்டான்.

"என்னணையக்கா! எல்லோரும் கிணத்தடியில நிண்டு ஒப்பாரி வைக்கிறியிள்?"

"செந்தூர்! எங்கட மணி கிணத்துக்கை தவறி விழுந்துட்டுது"

"மணியோ? கிணத்துக்கையோ?"

அவ்வளவு தான்.

'சளக்'!

தம்பி கிணத்துக்கை குதிச்சிட்டான். கொஞ்ச நேரத்தால துலாக் கொடியில் மணியைக் கட்டி ஒரு மாதிரி மேலே கொண்டு வந்திட்டான். மணியைக் கண்டவுடன் தாயாடும் செல்வியும் ஓடி வந்து அதை மூசி மூசி மணந்து பாத்திட்டு பேந்து திரும்பவும் பழையபடி கத்தத் தொடங்கிட்டுதுகள். மணி செத்துப் போச்செண்டு எனக்கு விளங்கிட்டுது. நானும் அழத் தொடங்கிட்டன்.

மணி செத்துப் போய் மூண்டாம் நாள் பின்னேரம். இஞ்சி திண்ட குரங்கு மாதிரி ஒரு மாதிரியாய் முகத்தைத் வைச்சுக் கொண்டு செந்தூர் எனக்குக் கிட்ட வந்து நிண்டான். என்னவோ ஒரு பிழை செய்து போட்டானெண்டு வடிவாய் விளங்கிட்டுது.

"என்னடா?"

"ஒண்டுமில்லையக்கா!"

பின்னால ஒளிச்சு வைச்சிருந்த தன்ரை ஜீன்ஸை எனக்கு முன்னால நீட்டினான். ஜீன்சின் பின் பக்கம் கிழிந்து தொங்கியது.

"ஏன்ரா? இப்படிக் கிழிஞ்சது?"

"அது வந்தக்கா.. .. .. ஜீன்ஸை ஆணியில் கொழுவியிருந்தனான். இண்டைக்கு ரூபன் மாஸ்ரரின்ரை கலியாண வீட்டு ரிசப்சனுக்கு போறதுக் காண்டி அவசரத்தில எடுக்கேக்க ஆணியில கொழுவுப்பட்டு.. .. "

"சரி!அப்படியெண்டால் மற்ற ஜீன்ஸைப் போட்டுக் கொண்டு போவன்"

"மற்ற 'ஜீன்ஸை' நேற்றுத் தான் லோன்றியில குடுத்தனான்" அண்டைக்கு அம்மா வாங்கிக் கொண்டு வந்த துணியையும் ரெயிலர் இன்னும் தைக்கேலையாம். இல்லாட்டி அதையாவது போட்டுக்கொண்டு போகலாம்"

"இப்ப என்னெண்டா ரிசப்சனுக்கு போகப்போறாய்?"

"அது தானக்கா எனக்கும் தெரியேல்லை"

அவனைப் பார்க்கப் பாவமாய் கிடந்திது. என்ன செய்யிறதெண்டு ஒரு நிமிசம் யோசிச்சன். என்ர கஸ்ர காலத்துக்கு அப்ப தான் எனக்கு அந்த யோசனை வந்தது.

"செந்தூர்! அம்மா எங்களுக்கு உடுப்பெடுக்கேக்க அண்ணைக்கும் எடுத்து அலுமாரிக்குள்ளே வைச்சிருக்கிறவா வெல்லோ. அதில ஒரு ஜீன்ஸை நைசாய் எடுத்துத் தாறன் நீ இண்டைக்கு மட்டும் அம்மாவுக்கு தெரியாமல் போட்டுக்கொண்டு போட்டு திருப்பிக் கொண்டு வந்து வைச்சுப் போடு!"

என்ரை யோசினைக்கு அமெரிக்காவின்ர பேச்சைக் கேக்கிற அயல் நாடுகள் போல தலையாட்டி 'ஓ' மெண்டு செந்தூர் சொன்னான்.

பிறகு செந்தூர் அலுமாரித் துறப்பை வீடு முழுக்க தடவி குசினிக்க கிடந்து எடுத்துக் கொண்டு வந்து என்னட்டை தந்தான். நான் அம்மா எங்க எண்டு நோட்டமிட்டன். கிணத்தடியில அம்மா உடுப்புத் தோய்ச்சுக் கொண்டு நிக்கிறது எனக்குத் கிறிலுக்குள்ளால தெரிஞ்சுது. எனக்கு நெஞ்சு படபடவெண்டு அடிச்சுது. நான் அலுமாரியைத் திறந்து அண்ணைக்கெண்டு அவ சேர்த்து வைச்சிருக்கின்ற உடுப்பை எடுத்த

**தாயோடு ரண்டு குட்டியளையும் தன்ரை முகத்தாலை தேய்ச்சு தேய்ச்சு அதுகளுக்கு தன்ரை அன்பைக் காட்டிக் கொண்டிருந்தது. இப்பவும் மணி வலப்பக்க முலையிலையும் செல்வி இடப்பக்க முலையிலும் தான் பால் குடிக்குதுகள். எப்படி இதுகள் ரண்டும் இப்படி வலப்பக்க முலை உனக்கு, இடப்பக்க முலை எனக்கு எண்டு பிரிச்சு வைச்சுக் குடிக்குதுகள்? அப்படிப் பிரிச்சுக் பாக்கிறதைத் தானே ஆறாவது அறிவு எண்டு சொல்லுகினம். அப்படியெண்டால் ஆடுகளுக்கும் ஆறறிவு இருக்குதோ?**

னான் எண்டு தெரிஞ்சால்.. பேந்து மனசி என்னைச் "சிப்பிலி" ஆட்டிப் போடும்.

இது தான் சரியான நேரமெண்டிட்டு சாமியறைக்குப் போய் துறப்பைப் போட்டு அலுமாரியைத் திறந்தன். அந்த அலுமாரிக்குள்ள "என்லார்ஜ்" பண்ணின பெரிய படத்தில அண்ணை சிரிச்சுக் கொண்டு இருந்தான். அவன்ரை படத்துக்கு கீழ் சேட்டுகளும் ரவுசர்களும் அவனுக்குப் பிடிச்ச பலகார பைக்கற்றுகளும், அவன்ரை சங்கிலி, மோதிரம், மணிக்கூடு எண்டு ஊரிப்பட்ட சாமான்கள்.. .. ..!

எனக்கு ஒரு பக்கம் அண்ணையை நினைச்சு அழுகையும் மற்றப்பக்கம் அம்மா இப்படிகாசைக் கொட்டி இதுகளை வாங்கி வீணாப்பூட்டி வைச்சு அநியாயமாக்கிறதைப் பாத்து ஆத்திரமும் வந்தது.

"ஏனடி அலுமாயைத் திறந்தனீ?" எனக்குப் பின்னால அம்மாவின்ர ஆத்திரக்குரல். பயத்தோட திரும்பினன். அம்மாவைப் பாக்க எனக்குப் பத்திர காளியின்ர ஞாபகம் வந்தது.

"அது வந்தணை உவன் செந்தூர் தான் ஜீன்ஸ் ஒண்டு இதுக்குள்ள எடுத்துச் தரச் சொன்னவன். அது தான்.. .. .. .."

"பளார்!"

அம்மா அடிச்ச அடியில என்ரை வலப் பக்க கன்னம் ரத்தம் மாதிரிச் சிவந்து போட்டுது.

"உந்த அலுமாரிக்கை இருக்கிறதெல்லாம் கொண்ணைக்கல்லோ! அதை எப்பிடியடி நீ எடுப்பாய்? அவன் செந்தூர்தான் சின்னப் பெடியன். ஜீன்ஸை எடுத்துத் தா எண்டு கேட்டா உடன நீயும் இது தான் சாட்டெண்டு அலுமாரிக்கை என்ன கிடக்கு தெண்டு தோண்டிப் பாக்கிறதோ?"

அம்மான்ரை இந்த "தோண்டிப் பார்க்கிறதோ" எண்ட சொல்லைக் கேட்டவுடன் எனக்கு இனிமேல் இல்லையெண்டளவுக்கு கோபம் வந்துட்டுது.

"ஓமோம்! தோண்டிப் பார்க்கிறதுக்கு உதுக்குள்ள பெரிய பொக்கிசமோ வைச்சிருக்கிறியள்? எப்பவோ அவங்கள் பிடிச்சுக் கொண்டு போனவனுக்கு. உடுப்பும், நகையும் சாப்பாடும் தானே வைச்சிருக்கிறாய். உனக்கு விசர் முத்திப் போச்சுது. இல்லாட்டி இப்படிக்காசை அநியாயம் பண்ணி அண்ணனுக்குப் பிடிச்சதை எல்லாம் வாங்கிப் பொத்திப்பொத்திப் அலுமாரிக்கை வைச்சிருப்பியோ? ஊரில எத்தினை பேர் காணாமல் போட்டினம்.

அவை யின்ர தாய் தேப்பனெல்லாம் இப்டியோ தங்கட காணாமல் போன பிள்ளை யளுக்கு உடுப்புக்கள் வாங்கிக் குவிக் குதுகள்? ஊர் உலகத்துக்குக் காட்டுற துக்கு தானே இப்படியெல்லாம் சேர்த்து வைச்சிருக்கிறாய்?"

ஆத்திரத்தில மரியாதையில்லாமல் அம்மாவைப் பேசிப் போட்டன். இன்னும் கனக்க கதைச்சிருப்பன். அதுக்குள்ள அம்மாஓ வெண்டு அழத் தொடங்கிட்டா. இனியும் நிண்டனெண்டால் வீண்சோலி தான் வருமெண்டிட்டு வெளியில போட்டன்.

"ஊருலகத்துக்கு அண்ணனில பாசமெண்டு காட்டத்தான் இப்பிடி அம்மா அண்ணனுக்குத் தேவையான எல்லாத்தையும் வாங்கி வைச்சிருக்க வேணும் அப்படியில்லாட்டி அம்மா வுக்கு விசராயிருக்க வேணும். நான் அம்மாவைப் பேசினதில என்ன பிழை?"

"ம்மேய் ய்ய் ய்ங்!" என்ரை கவனத்தை செல்வியின் முனகல் சத்தம் திசை திருப்பிப் போட்டுது. என்னெண்டு பாத்தன்.

தாயாடு செல்வியை தலையால இடிச்சுத் தள்ளிக் கொண்டு நிண்டுது.

தாயாட்டின்ர இடப்பக்க முலையில பால் எப்பனும் இல்ல. வலப்பக்க முலை பெரிசாய் பாலூன் மாதிரி ஊதிப் போய் நிரம்பிக் கிடந்திச்சு. அதைக் குடிக்கிறதுக்கு செல்வி எவ்வளவோ பாடுபட்டும் தாயாடு விடவேயில்லை.

சிலவேளை .. .. ..

எங்கட அம்மா மாதிரித்தான் தாயாடும் தன்ரை மகன் மணிக்காண்டித்தான் அது குடிச்ச முலையில பாலைச் சேர்த்து வைச்சிருக்குதோ?

அப்படி மணிக்கெண்டு சேர்த்து வைச்சிருந்தால் அதைச் செல்வி குடிக்க விடாமல் தாயாடு இடிக்கிறதுக்கு என்ன காரணம்? செல்வியும் அதின்ர குட்டியும் தானே! அதுக்கு விசரோ?! இல்லாட்டி மணி திரும்பி வந்து குடிக்குமெண்ட நம்பிக்கையோ?

அப்ப அம்மாவும் அப்படி அண்ணா கட்டாயம் திரும்பி வருவான் எண்ட நம்பிக் கையில தானோ அந்த உடுப்புக்களை யெல் லாம் சேத்து வைச்சிருக்கிறா?

சாமியறைக்கேக்க ச்தம் போடாமல் போனன். இன்னமும் அம்மா அழுது கொண்டிருந்தா. நான் ஒண்டும் கதைக்காமல் கீழே விழுந்து கிடந்த அண்ணையின்ர உடுப்புக்களை எடுத்து அலுமாரிக்க அடுக்கி வைச் சன்.

அம்மா இப்ப எழும்பி என்னையும் கட்டிப் பிடிச்சுக் கொண்டு அழத் தொடங்கிட்டா. வெளியில் தயாட்டிட்ட செல்வி அடிவங்கி அலறும் சத்தம் இன்னமும் கேட்டுக் கொண்டு இருந்தது.

*(யாவும் கற்பனையல்ல)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கந்தசாமியும் கலக்ஸியும்

**"சுமந்திரனை நம்பாதே" அத்தியாயம் - 14**

## அறிவியல் தொடர் கதை

(இந்தத் தொடரில் வரும் சம்பவங்கள், பெயர்கள் யாவும் கற்பனையே, அப்படி யாருக்கும் பொருந்தினால் அது தற்செயலானதே)

படலை ஜே.கே



எதை நாங்கள் சரியானது என்று நினைக்கிறோமோ அது பொதுவாக தலைகீழாகவே இருப்பதுண்டு; அதுவே பின்னர் சரியாகவும்போய்விடுவதுமுண்டு. சரியும் சரி, தவறும் சரி, எல்லாமே அவரவர் சட்டத்தில் தான். அது தெரியாமலேயே பூமிக்கிரகத்தில் வாழ்ந்த மனித இனம் கூட ஏதோ தாம் தான் கூர்ப்பில் சிறந்த அறிவுஜீவிகள் என்று அழியும் வரை நினைத்துக் கொண்டிருந்தார்கள். அதிலும் கூட இனத்துக்கினம் கூர்ப்பு வித்தியாசப்படும் என்றும் நம்பினார்கள்.
அமெரிக்காக்காரன் தன்னை விட சிறந்த புத்திஜீவி வேறு யாரும் இல்லை என்பான். யூதனை க் கேட்டால் அமெரிக்காவின் மூளையே தன்னது என்பான். சீனாக்காரனை கேட்டால் "மற்றவன் ஒருவனுக்கு நாங்கள் பத்துபேர் சமம், நேருக்கு நேர் வரட்டும் பார்க்கலாம்" என்பான். இந்தியாக்காரன் ஆ ஊ என்றால் ஆன்மீகத்தையும் அகிம்சையையும் தாம் தான் உலகுக்கு அறிமுகப்படுத்தியவன் என்பான். ஒரு பகவத் கீதையை திறந்து வாசிக்காமலேயே தம் மதம் தான் சிறந்தது என்பான். தனக்குள்ளேயே சாதி பிரிப்பான். அதிலும் திட்டித்தீர்ப்பதில் ஒரு சாதி மற்ற சாதிக்குஎன்றைக்குமே சளைத்ததில்லை.

கந்தசாமி கள்ளுத் தவறணையில் கொட்டாத தூஷணம் எல்லாம் சாதியின் பேரால் மாறி மாறி கொட்டி திட்டிவிட்டு ஒரு கட்டத்தில் "சேர் இவன் நுள்ளீட்டான்" என்று போலீஸில் ஒரு சாதிசேர்ந்த ஆள் ஒருவர் முறைப்பாடு கொடுப்பார். உடனேயே ரெண்டு பக்கத்து சாதிகளிலும் உள்ள இலக்கியவாதிகள் "மனப்போராட்டம் நிறைந்த யதார்த்த தூஷணம் பெரிதும் வெளிப்பட்டது யாரில்?" என்று ரீவி, பத்திரிகை என்று எல்லாப் பொதுவெளியிலும் சண்டை போடுவார்கள். கொஞ்ச நாளில் அது அலுத்துப்போய் கூர்ப்புவாதிகள் ஆபிரகாம் லிங்கன் ஒரு தமிழன் என்று பெருமைப்பட ஆரம்பிப்பார்கள். இப்படியாக இனத்திலிருந்து மதத்துக்குத் தாவி, ஊருக்குத் தாவி,படிக்கும் பாடசாலை, நண்பர்கள் வட்டாரம், தன் குடும்பம் என்று சுருங்கி இறுதியில் ஒவ்வொரு மனிதனும் தான் தான் பிரபஞ்சத்தின் சிறந்த அறிவுஜீவி என்று நிரூபிப்பதில் எல்லாமே வந்து முடியும். அல்லது அதிலிருந்து தான் எல்லாமே ஆரம்பமாகிறது என்று கூட சொல்லலாம்.

"இந்தப்பெண் அழகாக இருக்கிறாள்" என்று ஆரம்பத்தில் நினைத்திருப்பினும் ஆறே மாசத்தில், அவளுக்கு வருகிறதோ இல்லையோ, பார்த்தவனுக்கு வாந்தி வந்துவிடும். ஆறுமாசத்துக்கு பிறகு வரும் வாந்தி ஏன் ஆரம்பத்திலேயே வருவதில்லை என்று லொஜிக்கலாக கேட்டால், மனிதனுக்கே உரிய ஆறாம் அறிவு தொழிற்பட ஆரம்பிக்க குறைந்தபட்சம் ஆறுமாசமாவது எடுக்கும். ஆரம்பத்திலேயே அவனுக்கு அது தொழிற்பட ஆரம்பித்திருந்தால் அவன் அவளிடம் இருந்து தப்பியிருப்பான் தான். ஆனால் மனித இனம் தப்பியிருக்கமுடியாது. அவன் இனம் தப்பியிருக்கமுடியாது. அவன் படைப்பின் நோக்கம் தப்பியிருக்கமுடியாது. இதெல்லாம் அறியாமலேயே விழுந்து எழும்பி பின்னரும் விழுந்துகொண்டிருப்பான் மனிதன். பூமியில் மனிதர்களுக்கிடையே இடம்பெறும் காதல்கதைகளை கேட்டாலே முசுப்பாத்தியாக இருக்கும்.

"ரெண்டு வருஷத்துக்கு முதல் உன்னை முதல் முறை கண்ட அந்த செக்கனே நீ தான் எண்டு டிசைட் பண்ணீட்டன் தெரியுமா?"

"நானும் தான் .. ஒருக்கா அம்மாள் கோயிலில நான் தேங்காய உடைக்க முடியாம கஷ்டப்பட்டு கொண்டு இருக்கேக்க வந்து உடைச்சு குடுத்தியல்லோ ..அழுகல் தேங்காய் .. அத உடைச்சிட்டு ஒரு திமிரோட என்னை பார்த்தியேயடா .. அப்பவே நீ தான் எண்டு .."

கோயில் கேணியில் நான்காவது படிக்கட்டில் மத்தியானம் ரெண்டு மணிக்கு, உட்கார்ந்தால் பஞ்சாபி பின் பக்கம் பொசுங்கிடும். அவனோ ஏற்கனவே பொசுங்கினத அம்மாவிடம் கொடுத்து தைத்து தான் போட்டுக்கொண்டே வந்திருப்பான். இப்படி ஒரு காதல்கதை பத்து வருஷமாகப் போய்க்கொண்டிருக்கும். அப்புறம் இருவர் படிப்பும் முடிந்து, அவர் ஒருவழியாக ஆர்ஜெண்டீனா, மெக்ஸிகோ ரூட் பிடித்து கனடா போய், பேப்பர் எடுத்து, ரெலிபோன் கார்ட் கூட டொக்கியூமெண்டா கொடுத்து காதலை கனடாவுக்கு நிரூபித்து, காதலி கம் மனைவியை ஸ்பொன்சர் பண்ணி, ரிசப்ஷன் வைத்து, இங்கிலீஷ் கிஸ் அடித்து, அதை எடுத்து முகப்புத்தகத்தில் போட்டு 'லைக்' வாங்கி, அந்த சந்தோஷத்தில் அன்றைக்கு இரவு தான் முதன் முதலாய் அவளிடம் ஆசையோடு நெருங்குவதற்குள், பாதிவயது போய்விடும்.

மனித இனம் வந்தவேலையை விட்டுவிட்டு இப்படி ஒரு கூத்து அடித்துக்கொண்டிருக்க, பூமியில் வாழ்ந்த குரங்குகள், மனிதர்களை விடப் புத்திசாலிகளாக இருந்தன. அவர்கள் அகராதியில் கண்டதும் காதல் என்ற கதையே கிடையாது. கண்டதும் நேரடியாகவே பாலியல் லீலைதான் . அப்படிப்பட்ட கூர்ப்பறிவு மிக்க குரங்குகளுக்கு மனிதர்களின் நடவடிக்கையைப் பார்க்க சிரிப்புச் சிரிப்பாக இருக்கும்.

"அடே மொக்குகளா! வந்தவேலையை விட்டுவிட்டு இந்த வேலையைச் செய்துகொண்டிருக்கிறீர்களே? உங்களைப் போய் டிசைன் பண்ணின கொம்பியூட்டரை செருப்பாலே அடிக்கோணும்" என்று நினைத்துக்கொள்ளும். பூமி தட்டையானது, நான்கு யானைகள் அதைத் தாங்கி நிற்கின்றன என்பதில் தொடங்கி, அது உருண்டை, சூரியனை சுற்றிவருகிறது, உயிரினக் கூர்ப்பு என்றெல்லாம் கண்டுபிடித்து கடைசியில் எல்லாவற்றுக்குமே திணிவு கொடுத்தது ஹிக்ஸ் வெளி தான் என்பதை மனிதர்கள் கண்டுபிடித்து பெருமைப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏதாவது குரங்குக்கூட்டம் மனிதர்களை ஏளனமாக பார்த்து நெக் காட்டியிருக்கின்றன.

நோபல் பரிசு கொடுக்கும்போது ஊருக்குள் நுழைந்து மாங்காய்களையும் தேங்காய்களையும் ஆத்திரத்தில் பிடுங்கி எறிந்து தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கின்றன. மற்றும்படி தாமும் தன்பாடுமாக வாழும் காலத்தை சந்தோஷமாக கூட்டம் கூட்டமாக திரிந்து கொண்டாடியிருக்கின்றன.

பூமி அழியப்போகிறது, மிகிந்தர்கள் வரப்போகிறார்கள் என்று பல நூறு ஆண்டுகளுக்கு முன்னமேயே பூமியில் வாழ்ந்த குரங்குகள் இனத்துக்கு தெரிந்திருந்தன. அவர்களில் சில புத்திசாலிகள் அமேசான் காட்டுப்பகுதிக்குள் ஆய்வுகூடங்கள் அமைத்து எப்படி அங்கிருந்து கூட்டம் கூட்டமாக பூமி அழிக்கப்படும்போது தப்பலாம் என்று கூட ஆராய்ச்சி செய்திருக் கின்றன. அதை மனிதர்கள் டிஸ்கவரி சனலில் படம்பிடித்து குரங்குகளின் போக்குகளை டிவியில் பிரித்துமேய்ந்து கொண்டிருந்தி ருக்கிறார்கள். இருந்தும் குரங்குகள் என்ன தான் செய்கின்றன என்று மனிதனுக்கு விளங்கவில்லை. விளங்க முயற்சிக்கவும் இல்லை.


(கலக்குவார் கந்தசாமி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமரின் மறுபெயர்...

2009 மே 14ஆம் திகதி அன்று காலையில் கட்டளைத்தளபதி வேலவனுடன் சொர்ணம் ஏதோ தர்க்கப்பட்டு கொண்டிருந்தார். ஆளணி பற்றாக்குறையையடுத்து, வேலவனின் உதவியாளர்களையும் களமுனைக்கு அனுப்பும்படி சொர்ணம் சொல்ல, வேலவன் ஏதோ அதிருப்தி தெரிவித்துக் கொண்டிருந்தார்.

இது நடந்து ஒரு அரைமணித்தியாலத்திற்குள்- காலை சுமார் 10 மணியிருக்கும், அவர் இறந்து விட்டார் என்ற தகவல் வந்தது. அவருக்கு மிக அருகில் எறிகணையொன்று விழுந்தது. அதன் சிதறலில், ஏற்கனவே பாதிக்கப்பட்ட காலைவிட மற்றக்காலிலும் காயமடைந்து விட்டார். அவரிற்கு அனைத்தும் தெளிவாக தெரிந்திருக்க வேண்டும். அவரது உதவியாளர்களும் சுதாகரிக்க முன்னர், தனது கழுத்தில் இருந்த சயனைட் வில்லையை உட்கொண்டு மரணமானார். அவரது உடலத்தை அந்த முகாமிலேயே [வெள்ளாமுள்ளிவாய்க்கால்] போராளிகள் புதைத்தனர்.


நிஹால்

சொர்ணம் தலைமையில் மூதூர் மீது ஒரு பண்டநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.அந்தச் சமயத்தில் விடுதலைப் புலிகளின் மீது மிகை மதிப்பீடு உலகளாவிய அளவில் இருந்தது. ஏன், விடுதலைப்புலிகளிடமும் இருந்தது. அந்த நடவடிக்கையின் முடிவில், முழு திருகோணமலையையும் விட்டு புலிகள் பின்வாங்கி வந்தனர்.

இதன் பின்னர் போர் வன்னிக்கு வந்தது. மன்னாரில் ஆரம்பித்த போரை எதிர்கொள்ள புலிகள் ஒவ்வொரு தளபதிகளாக மாற்றிமாற்றிப் பார்த்தனர். அதனால் பலன் ஒன்றும் கிட்டவில்லை. சிலர் சற்று கூடுதலான காலம் தாக்குப்பிடித்தார்கள் அவ்வளவுதான். தீபன் மல்லாவியில் சில காலம் தாக்குப் பிடித்தார். வேலவன், ஜெயபுரத்தில் தாக்குப்பிடித்தார். ஆனாலும் படையினர் கையாண்ட நீர்பரவுவ்தைப் போன்ற உத்திக்கு, அகன்ற களத்தில் ஒரு இடத்தில் பலவீனம் தென்பட்டாலே போதும். இதற்குள்ளால் படையினர் நுழைந்து விடுவார்கள். மல்லாவியும் வீழ்ந்ததன் பின்னர், மீண்டும் சொர்ணம் களமிறக்கப்பட்டார். ஒவ்வொரு சிறு பட்டினங்களும் ஒவ்வொரு தளபதியின் பொறுப்பில் இருந்தது. மாங்குளம் சொர்ணத்திடம் வந்தது. போர்க்களத்தில் அவரைத் துரத்திய துரதிர்ஷ்டம் அங்கும் வந்தது.

அந்தச் சமயத்தில் ஆழ ஊடுருவும் படையணியின் தாக்குதல் தீவிரம் பெற்றிருந்தது. தளபதிகள் குறிவைக்கப்படாமல் இருக்க, களமுனைகளுக்கும், மூத்ததளபதிகளுக்கும் இரும்புக்கவசமிட்ட பவள் கவசவாகனங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. மாங்குளத்தில் நடந்ததை அந்தச் சமயத்தில் போராளிகள் பகிடியாக இப்படிச் சொல்வார்கள். "மாங்குளம் களத்திற்கு சொர்ணம் பவள் கவசவாகனத்தில் சென்றார். சில நாளிலேயே நடந்து பின்வாங்கி வந்தார். ஏனெனில், இராணுவத்திடம் அவரது பவள் கவசவாகனமும் சிக்கிக் கொண்டது."

இதன் பின்னர் புலிகளுக்கு தெரிவுகள் இருக்கவில்லை. எல்லாப்பக்கத்தாலும் யுத்தம் அவர்களை சூழ்ந்து விட்டது. தலைவர் பிரபாகரன் மிக நெருக்கடியான சந்தர்ப்பங்களில் சொர்ணத்தை ஏற்கனவே இரண்டுமுறை தனக்குத் துணையாக அழைத்திருந்ததை பார்த்திருந்தோம். இபபொழுது மூன்றாவது முறையாகவும் அழைத்தார். போர் புதுக்குடியிருப்புக்கு வந்து விட்டது. இந்தச் சமயத்தில் சிதறியிருக்கும் விடுதலைப் புலிகளின் வளங்களையும், ஆளணியையும் ஒருங்கிணைக்க பாதுகாப்புச் செயலர் என்ற ஒரு பதவிநிலையை புலிகளும் ஏற்படுத்தினார்கள். அவர்களின் முதலாவது பாதுகாப்புச் செயலர் தமிழேந்தியப்பா. அந்தச் சமயத்தில் புலிகள் கேப்பாப்பிலவின் மீது ஒரு தாக்குதல் நடத்தினார்கள். நான்காம் கட்ட ஈழப்போரில் புலிகள் செய்த குறிப்பிடும்படியான ஒரேயொரு வெற்றிகரமான தாக்குதல் அதுதான். அவர் கணக்கில் புலி. அது மாதிரி எந்தத் தளபதியிடம் எத்தனை போராளிகள் உள்ளனர் என்பதை பார்த்து, பொறுக்கியெடுப்பதிலும் கில்லாடி. ஆனால், இந்த திறமை மட்டும் போதவில்லை போலும். அவர் மாற்றப்பட்டு, சொர்ணம் அந்தப் பொறுப்பை எடுத்தார்.

ஆனந்தபுரம் சண்டையும் முடிந்ததன் பின்னர், புலிகள் தவிர்க்கவே முடியாத ஒரு வலிந்த தாக்குதலை நடத்தினார்கள். இந்தத் தாக்குதலின் தளபதிகள் இருவர். ஒருவர் சொர்ணம், மற்றவர் சாள்ஸ் அன்ரனி.



முள்ளிவாய்க்கால், மாத்தளன், சாலை உள்ளிட்ட நிலப்பரப்பை பிரிக்கும் சிறுகடலை கடந்து தேவிபுரம் பகுதியில் ஏறுவதுதான் திட்டம். அதன் பின்னர், சுதந்திரபுரம் பகுதிவரை பக்கவாட்டாக பரவி, பரந்தன் முல்லைத்தீவு வீதியில் ஏறுவது. இராணுவத்தின் பின்தளத்தை குழப்புவது. இதுதான் திட்டம். சுமார் 800 போராளிகள் இந்த நடவடிக்கையில் களமிறக்கப்பட்டனர்.

இந்தச் சமயத்தில் விடுதலைப்புலிகளில் ஏற்பட்டிருந்த இன்னொரு மாற்றத்தையும் குறிப்பிட்டேயாக வேண்டும். பிரபாகரனின் மகன் சாள்ஸ் அன்ரனி அமைப்புக்குள் குறிப்பிடும்படியான நிலைக்கு முன்னகர்த்தப்பட்டார். ஆரம்பத்தில் அவரிடம் கணினிப் பிரிவுதான் ஒப்படைக்கப்பட்டது. அது ஒரு நிர்வாக அலகு என்பதற்கு அப்பால், தனியான இயக்கத்தைப் போல ஆளணி மற்றும் பௌதீக வளங்கள் வழங்கப்பட்டன.

சாள்ஸின் வரவு தளபதிகளுக்குள் என்னவிதமாக எண்ணத்தை ஏற்படுத்தியது என்பதை யாராலும் தெளிவாக குறிப்பிட முடியாதென்றுதான் நினைக்கிறேன். ஏனெனில், அப்படியான சம்பவங்கள் பரவலாகப் பதிவு செய்யப்படவில்லை. பல தளபதிகள் சாள்ஸை அரவணைத்து செல்லவே விரும்பினார்கள். இவர்களில் பானு முன்னிலையில் இருந்தார். இதனால், பானு எது சொன்னாலும் சரியாக இருக்குமென சாள்ஸ் நம்பினார். சாள்ஸ் தொடர்பான எதிர்மறையான இரண்டு சம்பவங்கள்தான் பதிவாகியுள்ளன. கடற்புலிகளின் தளபதி சூசை சாள்ஸின் முன்னிலைக்கெதிரான அதிருப்தியை பல சந்தர்ப்பத்திலும் காட்டினார். சாள்ஸ் நடத்திய பல கூட்டங்களில் அவர் கலந்து கொள்வதில்லை.

தேவிபுரத்துக்குள் புலிகளின் படையணிகள் நுழைந்ததும், படையினர் வேவுவிமானங்களின் உதவியுடன் அந்தச் சாவலை எதிர் கொண்டனர். அணிகள் நகர்வதை வேவுவிமானங்களினால் அவதானித்து, தரை நகர்வு மற்றும் செல்தாக்குதல்கள் நடத்தினார்கள். இந்தச் சண்டை மிகமோசமான தோல்வியில் முடிந்தது.

சண்டையின் இரண்டாம் நாளே சொர்ணம் மிக மோசமாகக் காயமடைந்தார். அவரது கால் தொடை எலும்பொன்று உடைந்தது. சாள்ஸ் அன்ரனியும் காயமடைந்தார். இதனையடுத்து அணிகள் பின்வாங்கத் தொடங்கின.

இதன் பின்னர், சொர்ணம் படுத்த படுக்கையாகவே இருந்தார். படுத்த படுக்கையாக இருந்தே களத்தை வழிநடத்தினார். அவர்தான் முழுக் களத்தையும் கவனித்துக் கொண்டிருந்தார்.

இதே சமயத்தில் அவர் தன்னுடனிருந்த போராளிகளிடம் திரும்பத் திரும்ப ஒரு விடயத்தை சொல்லிக் கொண்டிருந்தார். "அண்ணைக்கு ஏதும் நடக்க முதல் நான் செத்திடுவன்" என அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்.

இந்த நேரத்தில் ஆளணித் தட்டுப்பாடு, ஆயுதத்தட்டுப்பாடு அதிகமாக நிலவியது. இதனால் களமுனைகளை கட்டுப்படுத்த முடியாமல் சொர்ணம் திண்டாடிக் கொண்டிருந்தார். அந்த தட்டுப்பாடுகள் பல சந்தர்ப்பத்தில் அவரை விரக்தியடைய வைத்தன. தொலைத் தொடர்பு கருவியிலேயே அனைவரும் அனைத்தையும் பேசிக் கொண்டனர். பின்தளங்களுக்கு வந்து சந்திக்க பொழுதும், இடமும் இருக்கவில்லை. இந்தக் கட்டுரையாளர் சொர்ணத்தின் கட்டளைகளையும், விரக்தியான பேச்சுக்களையும் தொடர்ந்து தொலைத்தொடர்பு வழிகளில் கேட்டுக் கொண்டிருந்தார்.

2009 மே 14ஆம் திகதி அன்று காலையில் கட்டளைத்தளபதி வேலவனுடன் சொர்ணம் ஏதோ தர்க்கப்பட்டு கொண்டிருந்தார். ஆளணி பற்றாக்குறையையடுத்து, வேலவனின் உதவியாளர்களையும் களமுனைக்கு அனுப்பும்படி சொர்ணம் சொல்ல, வேலவன் ஏதோ அதிருப்தி தெரிவித்துக் கொண்டிருந்தார்.

இது நடந்து ஒரு அரைமணித்தியாலத்திற்குள்- காலை சுமார் 10 மணியிருக்கும், அவர் இறந்து விட்டார் என்ற தகவல் வந்தது. அவருக்கு மிக அருகில் எறிகணையொன்று விழுந்தது. அதன் சிதறலில், ஏற்கனவே பாதிக்கப்பட்ட காலைவிட மற்றக்காலிலும் காயமடைந்து விட்டார். அவருக்கு அனைத்தும் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். அவரது உதவியாளர்கள் சுதாகரிக்க முன்னர், தனது கழுத்தில் இருந்த சயனைட் வில்லையை உட்கொண்டு மரணமானார். அவரது உடலத்தை அந்த முகாமிலேயே (வெள்ளாமுள்ளிவாய்க்கால்) போராளிகள் புதைத்தனர்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட் மார்க் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 ஓகஸ்ட் 27 ஆம் திகதி வெளியிடப்பட்டது.